கிழக்கெங்கும் பயணிக்கவுள்ள மலைமுரசு
50 வது இதழில் இருந்து

வைகாசி மாதம் 25ம் திகதி

June 08, 2013

# மலைமுரசு®

MALAIMURASU

அறைவு 01 இயம் 46

உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின் வாக்கினிலே ஒளி உண்டாகும்

வார இதழ்

விலை – 20.00 Registered as a Newspaper in Sri Lanka பக்கங்கள் – 10 பிரதி சனி தோறும் திருமலையில் இருந்து வெளியாகும் பத்திரிகை


# கிழக்கு மாகாண சபை

(ஸ்ரீ)

## அமர்வுகளைப் புறக்கணிக்கவுள்ள ஆளுங்கட்சி

கிழக்கு மாகாண சபையின் ஆளுங்கட்சி அங்கத்தவர்கள் இருபது பேர் அமர்வுகளுக்குச் சமூகமளிப்பதில்லை என்ற முடிவுடன் இருப்பதாக ஆங்கில வலைப் பக்க ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது. இவ்வாறு அமர்வுகளைப் புறக்கணிக்கும் அவர்களின் கோரிக்கைகள் யாதெனில் வடமாகாணசபைத் தேர்தலை ஒத்திவைப்பது, கிழக்கு மாகாண சபையின் ஆளுனர் மற்றும் முதலமைச்சர் ஆகியோரை மாற்றுவது உட்பட கிழக்கில் நிர்வாகக் கட்டமைப்பை மீளஅமைப்பது போன்றவையாகும் என்று அவ் ஊடகம் தெரிவித்துள்ளது. ''வினைத்திறனின்மையையும், வேறுபாடின்மையையும் மாகாண சபையில் பணியாற்றுவதற்குள்ள மிக முக்கிய தடைகள் என்பதைப் பற்றியே நாம் பேச விளைகின்றோம் என கிழக்கு மாகாண சபையின் பதில் தவிசாளர் எம் எஸ் சுபைர் தெரிவித்துள்ளார். ஆனால் எமது இந் நடவடிக்கையை தவறுதலாக-வேனும் எமது சனாதிபதிக்கோ அல்லது அரசிற்கோ எதிரான நடவடிக்கை-யென்று கருதிவிட வேண்டாம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். கிழக்கு மாகாண சபையின் ஆளும் கட்சி உறுப்பினர்களால் கிழக்கிலுள்ள மக்களுக்காக நல்வாழ்வுத் திட்டங்கள் எவற்றையும் நிறைவேற்ற முடியாதிருப்பதால்.. 7

# வடக்குடன் என்றும் இணைய முடியாத கிழக்கு

## தமிழ் தேசியக் கூட்டமைப்பு கடும் கண்டனம்



இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட அடுத்தடுத்து இருக்கும் மாகாணங்கள் தாம் விரும்பி-னாலும் ஒன்றிணைய முடியாது என்ற வகையில் அரசாங்கம் 13 வது திருத்தச் சட்டத்தில் திருத்தத்தை கொண்டுவந்து அதனை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

கொழும்பு பான்ஸ் பிளேஸில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற ஊடக-வியலாளர் மாநாட்டில் கலந்து கொண்ட பாராளுமன்ற உறுப்பினரும் கூட்டமைப்பின் பேச்சாளருமான சுரேஸ் பிரேமச்சந்திரன் கருத்துத் தெரிவிக்கை-யிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இவ் விடயம் குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், குறித்த சட்டமூலத்தின் படி வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் எதிர்காலத்தில் தாங்கள்.. 7

## நிலாவெளி நோக்கி நகர முயற்சிக்கும் அனிலானா ஹோட்டல் குழுமம்

எதிர்வரும் 12ம் திகதி இலங்கையின் உல்லாசப் பயணத்துறை நிறுவனங்களுள் ஒன்றான அனிலான ஹோட்டல் நிறுவனம் நாற்பது பில்லியன் ரூபாய் முதலீட்டைத்.. 7

# தகரத்தில் அடைக்கும் மீன் ஆலை: திருமலைக்கு வருமா?

இலங்கையில் தகரத்தி-லடைக்கும் மீன் ஆலையொன்றை நிறுவுவதற்கு தாய்லாந்தின் மிகப் பெரிய தகரத்திலடைக்கும் மீன் ஆலை நிறுவனம் தயாராகிவருவதைத் தொடர்ந்து அத் தொழிற்சாலை திருமலையில் நிறுவப்படுமா என்னும் எதிர்பார்ப்பு கிளம்பியுள்ளது.

தாய்லாந்தின் "தாய் யூனியன் மனுபக்சரிங் கம்பனி" இலங்கையில் தனது ஆலையொன்றை நிறுவ முன்வந்துள்ளதாக இலங்கைக்.. 7

## 1.2 பில்லியன் பெறுமதியான விடுதலைப் புலிகளின் சொத்துக்களை அரசு கைப்பற்றியது

பயங்கரவாத புலனாய்வுப் பிரிவினரின் விசாரணைகளிலிருந்து வெளிச்சத்துக்கு வந்த தகவல்களின் அடிப்படையில் ஒரு பில்லியனுக்கு மேற்பட்ட பெறுமதி வாய்ந்த விடுதலைப் புலிகளின் சொத்துக்களை அரசு கையகப்படுத்தவுள்ளது. காணி, வீட்டுத் தொகுதிகள், அச்சகங்கள், வீடுகள், இயந்திரங்கள், ஆடைத் தொழிற்சாலைகள், மீன்பிடி வள்ளங்கள் போன்ற இன்னோரன்ன சொத்துக்கள் புலிகளுக்கு உரித்தாயிருப்பது கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்தே இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட-வுள்ளது. சுமார் 1.2 பில்லியன்.. 7

## ஊசலாடும் திருமலையின் அமெரிக்க நிலையம்!!!

அமெரிக்கா, திருகோணமலையில் அமெரிக்கன் கோணர் என்ற பொது தகவல் மற்றும் செயற்பாட்டு நிலையத்தை அமைப்பதற்கு கொழும்பிலுள்ள தனது தூதரகத்தின் ஊடாக திருகோணமலை நகரசபையுடன் கடந்த மே மாதம் 22ம் நாள் உடன்பாடு ஒன்றைச் செய்து கொண்டது என்பதையும் அதனைத் தொடர்ந்து அந்நிலையத்தை அமைப்பதற்கு இலங்கை அரசு தனது வெளிவிவகார அமைச்சின் ஊடாக முட்டுக்-கட்டைகளைப் போட்டதும் ஏற்கனவே தெரிய வந்ததே.

அதனைத் தொடர்ந்து திருகோணமலை நகரசபையின் செயலர் அமெரிக்கத் தூதரகத்துடனான.. 7

## 15 வருடங்களின் பின்னர் மீளத் திறக்கப்பட்ட பாடசாலையின் மாணவிகள் சாதனை





திருகோணமலையின் பன்குளத்திலுள்ள ஔவை நகர் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையானது 1990ம் ஆண்டில் மூடப்பட்டு 2005ம் ஆண்டில் மீளத் திறக்கப்பட்டது. அப்பாடசாலையிலிருந்து 30 வருடங்களின் பின்னர் கடந்த 2012ம் ஆண்டில் இரண்டு மாணவிகள்.. 7

## ஏழை மாணவர்களை சந்தித்த பாகிஸ்தானிய கடற்படையினர்



7

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
159A, 2வது மாடி, கடல் முக வீதி,
திருக்கோணமலை.
malaimurasu@hotmail.com
0754252042

## வணக்கம்

பெண் கல்வி!!!

கடந்த வியாழக்கிழமை விபுலானந்தா இசை நடனக் கல்லூரியில் மதிய நேரத்தைக் கழிக்க முடிந்தது. அப்போது மரத்தின் கீழ் இருந்த கல்லிருக்கைகளில் எனக்குப் பின்னால் இருந்த முஸ்லிம் தாய்மார் பேசுவதைக் கேட்கக் கிடைத்தது.

அவர்களின் பேச்சு என்னவோ பெண்குழந்தைகளை ஏன் படிக்க வைக்க வேண்டும் என்ற தொனியிலேயே பயணித்தது.

பெண்கள் வேலைக்குப் போவதற்கும் வீட்டிலிருப்பதற்கும் அளவான கல்வி போதும் என்ற ஏகோபித்த முடிவை அவர்கள் எடுத்திருந்தார்கள்.

பெண்கள் வேலைக்குப் போவதை விட்டு விடுங்கள். வீட்டிலிருக்கும் பெண்ணுக்குத்தான் கல்வி அறிவு மிக அதிகமாகத் தேவைப்படுகின்றது. இங்கு பெண்களுக்கான கல்வி அறிவின் தேவையை தற்காலத்துடன் மட்டும் பொருத்திப் பார்க்காமல் எதிர்காலத்துடனும் பொருத்திப் பார்க்க வேண்டியிருப்பதை யாரும் நினைத்துப் பார்ப்பதில்லை.

குழந்தையொன்றின் மூளை வளர்ச்சியானது அக் குழந்தை கருவிலிருக்கும் போதே ஆரம்பமாகி சுமார ஐந்து வயதிற்குள் பரிபூரண வளர்ச்சி நிலையை அடைந்து விடுகின்றது என்பதை நாம் அறிவோம். அதனால்த்தான் குழந்தை கருவிலிருக்கும் போதே தாய் தனது சிந்தனைகளில் தகுந்த மாற்றங்களை ஏற்படுத்துவதுடன் வாசிப்பின் ஊடாகவும், நல்ல விடயங்களைக் கேட்பதன் ஊடாகவும் குழந்தை தனது கல்வியைத் தொடங்கி விடுகின்றது என்பதைப் புராணங்களும் விஞ்ஞானமும் எமக்கு எடுத்தியம்புகின்றது. அறிவுள்ள குழந்தையொன்றின் உருவாக்கத்திற்கு தாய்க்குக் கல்வி அறிவு தேவையில்லையா?

அடுத்து பிறந்த குழந்தையின் மூளை வளர்ச்சிக் காலம் முழுவதும் அக் குழந்தைக்கு அருகிலிருந்து அக்கறையெடுத்துக் கற்பிப்பது யார்? வேலைக்குப் போகாத பெண் தானே? அவளுக்குக் கல்வி அறிவு தேவையில்லையா?

பெண்தானே வம்சத்தை உருவாக்குகின்றாள். அந்த வம்சச் சிற்பிக்கு உளியாய்க் கையில் இருப்பது கல்வி தான்.

ஆனால் நான் மேற்சொன்ன விடயங்களை எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்னரேயே எல்லாப் பெரியோரும் கூறிவிட்டுச் சென்று விட்டார்கள். அவ்வாறெனில் என் பின்னேயிருந்து ஏகோபித்த குரலில் பெண்ணுக்கு மட்டுப்பாடான கல்வி மட்டும் போதுமானது என்று பேசி முடித்த பெண்களுக்கு இந்த விடயம் ஏன் புரியாமல் போய் விட்டது.

அவர்கள் படித்தது போதாதோ!
எனில் அவ்விடத்தில் பெண்களின் கல்வி பற்றிப் புரிந்துகொண்டிருந்த நான் மௌனியாய் இருந்தது மட்டும் என்ன?
பெரிய படித்த வித்துவத்தனமா?

# ஆசிரிய சேவைக்குப் புதிய ஒழுங்கு விதிகள் – இலங்கை ஆசிரியர் சங்கம் எதிர்ப்பு –

ஆசிரிய சேவைப் பிரமானக் குறிப்புக்களில் தன்னிச்சையாக மாற்றம் கொண்டுவர கல்வி அமைச்சர் எத்தனிப்பதாக இலங்கை ஆசிரியர் சங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது. இம் மாற்றங்கள் தொடர்பாக ஆசிரியர் சங்கங்களுடனோ அல்லது அதிபர்கள் சங்கத்துடனோ எவ்வகையான கலந்துரையாடல்களும் மேற்கொள்ளப்படவில்லை எனக் கூறியுள்ள ஆசிரியர் சங்கச் செயலரான ஜோசப் ஸ்டாலின் ஏற்கனவேயுள்ள பிரமாணக் குறிப்புக்களில் திருத்தங்களை மேற்கொள்ள எடுக்கப்படும் இவ்வகையான தன்னிச்சை முடிவுகளுக்க எதிராக இலங்கை ஆசிரியர் சங்கமும், அதிபர்கள்கள் சங்கமும் இணைந்து நிபுணத்துவ எதிர்பு நடவடிக்கைகளில் ஈடுபடும் என்றும் எச்சரித்துள்ளார்.

ලංකා ගුරු සංගමය
இலங்கை ஆசிரியர் சங்கம்
CEYLON TEACHERS' UNION
65/3, Chittampalam A. Gardiner Mawatha, Colombo 02.
Tele/Fax: 0112458058 | E.mail: ceylonteachers@gmail.com
Regd No. 984

## இந்து சமயத்தலங்கள் மற்றும் மதகுருக்களின் மீதான தாக்குதலைக் கண்டித்துள்ள மூதூர்ப் பிரதேச இந்துக் குருமார் சங்கம்

(ஜவாஹிர்)

மட்டக்களப்பில் பல சைவத் தலங்கள் உடைக்கப்பட்டுய் பல மில்லியன் ரூபாய்ப் பெறுமானமுள்ள சிலைகள் மற்றும் சொத்துக்கள் களவாடப்பட்டதையும் செல்லக் கதிர்காமத்தின் பிரதம குரு கூரான ஆயுதமொன்றால் குத்திக் கொலை செய்யப்பட்டதையும் கடுமையாகக் கண்டிப்பதாக மூதூர் பிரதேச இந்துக் குருமார் சங்கம் தெரிவித்துள்ளது. இக் கொள்ளை மற்றும் கொலைகளை தமது சங்கம் வன்மையாகக் கண்டிப்பதாக மலைமுரசிற்குத் தெரிவித்த மூதூர் பிரதேச இந்துக் குருமார் சங்கத்தின் தலைவர் சிவஶ்ரீ இ.பாஸ்கரன் குருக்கள் அவர்கள் தெரிவித்ததுடன் இக்கொள்ளைகள் மற்றும் கொலைகள் தொடர்பாக உரிய அதிகாரிகள் தகுந்த நடவடிக்கைகளை உடனடியாக எடுத்து சம்பந்தப்பட்டவர்களைச் சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். அத்துடன் இவ்வாறான சம்பவங்கள் எதிர்காலத்தில் நடைபெறாமலிருக்க அரச அதிகாரிகள் தகுந்த நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும் என அவர் கேட்டுக்கொண்டார்.

## மூதூர் அல்மநார் வித்தியால சாரணர் பயிற்சி முகாம்

ஆலிம்சேனைக் கிராமத்தில் தி/மூதூர் அல்மநார் வித்தியாலய மாணவர்களுக்கான மூன்று நாள் சாரணர் பயிற்சி முகாமொன்று மாவட்ட சாரணர் இயக்கத்தின் மூதூர் பிரதேச இணைப்பாளரான எம்.எம் இச்சாத் தலைமையில் நடந்தேறியுள்ளது. மே மாதம் 31ம் நாள் ஆரம்பமான இப் பயிற்சி முகாமில் முக்கியமாக மாணவர்களின் ஒழுக்க விழுமியங்களே போதிக்கப்பட்டன. ஜூன் மாதம் 02ம் நாள் நிறைவான இப் பாசறையின் நிறைவு நாளில் சாரணிய இயக்கத்தின் மூதூர் பிரதேச இணைப்பாளர் கருத்துத் தெரிவிக்கையில் இவ்வகையான முகாம்களை எல்லாப் பாடசாலைகளிலும் இலவசமாக நடாத்துவதற்குத் தான் மிக ஆவலுடன் இருப்பதாக தெரிவித்தார்.

அங்கு தனது கருத்தைத் தெரிவித்த அல்மநார் வித்தியாலய அதிபர் திரு.எஸ். மஜுன் "எந்த உதவிகளையும் எதிர்பார்க்காமல் மாணவர்களுக்குச் சாரணீயம் கற்பித்த சாரணிய பிரதேச இணைப்பாளருக்கு நாம் அனைவரும் நன்றி கூறக் கடமைப் பட்டுள்ளோம் எனத் தெரிவித்தார்.

## மூதூர் பஹ்றியா நகரில் டெங்கு ஒழிப்பு வாரம்.

05.06.2013ல் உலகெங்கும் கொண்டாடப்பட்ட உலக சுகாதாரத் தினத்தை முன்னிட்டு மூதூர் பஹ்றியா நகரில் பாரிய சிரமதான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. "டெங்குவைக் கண்டழிப்போம்" என்னும் தொனிப்பொருளில் நிகழ்ந்த இச் சிரமதான நிகழ்வை மூதூர் பஹ்றியா நகரின் பொதுமக்கள் (சிவில்) பாதுகாப்புக் குழுவினர் ஏற்பாடு செய்திருந்தனர். இச் சிரமதானத்திற்கு காவல்துறைப் பொறுப்பாளர் லால் உடகமகே, பிரதேசச் செயலாளர், பிரதேசசபைத் தவிசாளர், கிராமசேவையாளர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், ஈராக் விளையாட்டுக் கழகம், பஹ்றியா விளையாட்டுக் கழகம், பஹ்றியா கிராம அபிவிருத்திச் சங்கம், பஹ்றியா பள்ளிவாசல் தலைவர், மற்றும் ஊர் மக்கள் பலரும் கலந்து சிரமதானத்தை திறம்பட நடாத்தி முடித்துள்ளனர். (ஜவாஹிர்)

# ஆசிய முரசு

## சீனாவின் அத்துமீறலை தடுக்க புதிய படைப்பிரிவை உருவாக்கியது இந்தியா

இந்திய எல்லைப் பகுதியில் சீன ராணுவம் தொடராக அத்துமீறலில் ஈடுபட்டு வருவதால் இந்த எல்லைப் பகுதி பாதுகாப்புக்கு என புதிதாக ஒரு படையை உருவாக்க மத்திய அரசு திட்டமிட்டுள்ளது.

40,000 வீரர்களைக் கொண்ட, அதி நவீன ஆயுதங்கள், மலையேற்றத்தில் மிகச் சிறந்த நிபுணத்துவம் கொண்ட Mountain Strike Corps என்ற பெயரில் இந்தப் படை உருவாக்கப்படவுள்ளது

நவீன ஹெலிகாப்டர்கள், Bamini (பாமினி) விமானங்கள், போர்க் கருவிகள், இரவு-பகலாக எல்லையைப் பாதுகாக்க உதவும் ரேடார்கள் உள்ளிட்ட அனைத்து வசதிகளும் இப் படையினருக்கு வழங்கப்படும். இதற்காக இந்த ஐந்தாண்டு திட்டத்தில் மட்டும் ரூ. 62,000 கோடியை இந்திய அரசு செலவிடவுள்ளது. இதற்காக மொத்தமாக ரூ. 82,000 கோடி செலவாகும் என்று தெரிகிறது. இப் படைப் பிரிவின் தலைமையகம் மேற்கு வங்கத்தின் பனாகர்க் பகுதியில் அமையவுள்ளது. இந்தப் படை உருவாக்கப்பட்டால், ஒருவேளை இந்தியா மீது சீனா தாக்குதல் தொடுத்தால், அதன் கட்டுப்பாட்டில் உள்ள திபெத் மீது உடனடியாக இந்தியாவால் பதிலடி தாக்குதலைத் தொடுக்கவும் முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.


## சீனாவில் தீ!!!

சீனாவின் வடகிழக்கே கோழி இறைச்சி தொழிற்சாலை ஒன்றில் ஏற்பட்ட தீயில் சிக்கி குறைந்தது 112 பேர் பலியாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

தொழிற்சாலையில் தீ ஏற்பட்டதையடுத்து அந்த தொழிற்சாலையிலிருந்து அவசரமாக வெளியேறுவதற்கு வழியில்லாமையினாலேயே இவர்கள் பலியாகியுள்ளதாக அந்நாட்டு செய்திகள் தெரிவிக்கின்றன. அத்துடன் நூற்றுக்கணக்கானோர் எரிகாயங்களுக்கு உள்ளாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மிஷாஸி என்ற நகரத்தில் உள்ள இத்தொழிற்சாலையில் தீ ஏற்படுவதற்கு அம்மோனியா வாயுக் கசிவு காரணமா அல்லது மின் கசிவு காரணமா என்பது இன்னும் தெளிவாகவில்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

## பாகிஸ்தான் நாட்டின் பிரதமராக நவாஸ் ஷெரிப் பதவியேற்பு!



பாகிஸ்தான் நாட்டின் பிரதமராக நவாஸ் ஷெரிப் பதவியேற்றுக் கொண்டார். 63 வயதாகும் நவாஸ் ஷெரிப்பின் கட்சி, கடந்த பொதுத் தேர்தலில் 180 இடங்களில் வெற்றி பெற்றது. இதையடுத்து இஸ்லாமாபாத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், நவாஸ் ஷெரிப் பாகிஸ்தானின் பிரதமராக பதவியேற்றுக் கொண்டார்.

பாகிஸ்தானின் பிரதமராக நவாஸ் பதவியேற்பது இது மூன்றாவது முறையாகும். அவருடன், ஒரு சில முக்கியத்துறை அமைச்சர்களும் பதவியேற்றுக் கொண்டனர்.

## 121 கோடியைத் தொட்டது இந்திய சனத்தொகை

இந்தியாவின் சனத்தொகை 121 கோடியாக அதிகரித்துள்ளது. இதில் ஆண்களின் எண்ணிக்கை 62.3 கோடி, பெண்களின் எண்ணிக்கை 58.7 கோடியாகும்.

இது கடந்த 10 ஆண்டுகளுக்கு முன் ஒப்பிடுகையில் 17.7 சதவீத அதிகரிப்பாகும். தேசிய அளவில் 2011ம் ஆண்டு எடுக்கப்பட்ட புள்ளிவிபர [illegible] தற்போது வெளியாகியுள்ளன.

அதன்படி 2001 முதல் 2011ம் வரையிலான கடந்த 10 ஆண்டுகளில் இந்திய மக்கள் தொகை 18 கோடி அதிகரித்துள்ளது.

இதில் ஆண், பெண்களின் எண்ணிக்கை சரிசமமாக தலா 9 கோடி அதிகரித்துள்ளது. நாட்டில் பெரும்பான்மையானோர் இன்னும் கிராமப் பகுதிகளிலேயே வசிப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# முதலாவது ஆளில்லா விமானத்தைத் தயாரித்து மொரட்டுவை பல்கலைக்கழகம் சாதனை

ஆளில்லா விமானமொன்றைத் தாமாகவே தயாரித்து வானில் பறக்கவிட்டு மொரட்டுவைப் பல்கலைக்கழக பொறியியல்ப் பிரிவு மாணவர்கள் சாதனை படைத்துள்ளனர். சுமார் 12 நிமிடங்கள் 200 மீற்றர் உயரத்திற் பறந்த இவ் விமானமானது தடையின்றி கட்டுப்பாட்டு நிலையத்திற்குத் தகவல்களையும் சலனப் படங்களையும் அனுப்பியுள்ளது.

மொரட்டுவைப் பல்கலைக்கழகப் பொறியியற் பிரிவின் சிரேட்ட விரிவுரையாளரான பேராசிரியர் சுதத் றோகண முனசிங்கவின் வழிகாட்டலில் நான்கு மாணவர்கள் இணைந்து இவ் விமானத்தைத் தயாரித்துள்ளனர். பாதுகாப்பு அமைச்சின் அனுமதி கிடைக்குமாயின் ஆளில்லா விமானங்களை உருவாக்குவதற்கான நிதி ஆதரவைப் பெற்று வினைத்திறன் வாய்நத முழு அளவிலான விமானங்களைத் தம்மால் தயாரிக்க முடியும் என பேராசிரியர் சுதத் தெரிவித்துள்ளார்.

## வன்புணர்வுணர்வைத் தூண்டும் குட்டைப் பாவாடைகள்

இரத்தினபுரி நீதிமன்றத்தில் வன்புணர்வுக் குற்றமொன்றை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட மஜிட்ரேட் நீதிமன்ற நீதிபதி பாலியல் துன்புறுத்தலுக்குள்ளான பெண் அணிந்திருந்த உடை தொடர்பாக காவல்துறையினர் விசாரணைகளா மேற்கொண்டார்களா எனக் கேள்வி எழுப்பியுள்ளார். அதன் போது "சிற்றாடைகளைப் பெண்கள் அணிவது ஆண்களிடமிருந்து பிரச்சனைகளை உருவாக்கிக் கொள்வதற்கான அழைப்பே" என்றும் அவர் தெரிவித்துள்ளார். இரத்தினபுரி வைத்தியசாலையில் பணியாற்றும் தாதி ஒருவர் இரவுக் கடமைக்காகச் செல்லும் வேளையில் மூவர் அடங்கிய குழுவொன்று அத் தாதியின் தொடைகளைப் தொட்டது தொடர்பாகத் தொடரப்பட்ட வழக்கில் நீதிபதி இக்கருத்தை வெளியிட்டுள்ளார். சந்தேகநபர்களை நீதிமன்றில் முன்நிலைப்படுத்திய காவல்துறையினர் " இச் செயற்பாட்டை முளையிலே கிள்ளி எறியாது விட்டால் எதிர்காலத்தில் இரத்தினபுரி வீதிகளில் பெண்கள் இரவு வேளைகளில் சென்று வருவது பிரச்சனைக்குரியதாகி விடும்" எனத் தெரிவித்துள்ளனர்.

## இந்திய மசகெண்ணைக் கம்பனியுடன் கைகோர்க்கும் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்.

இந்திய மசகெண்ணை நிறுவனமான ஐ.ஓ.சி யுடன் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் கூட்டுமுயற்சியொன்றை நிறுவ முன்வந்துள்ளது. இக் கூட்டுமுயற்சியின் ஊடாக எண்ணை மற்றும் எரிவாயு தொடர்பான பல்வேறு திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன எனத் தெரியவருகின்றது. இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையே திரவ எரிவாயுவைக் கடத்தும் பாரிய திட்டமொன்றினையும் இக் கூட்டுமுயற்சியின் ஊடாக உருவாக்கி இலங்கையின் மின்வலு உற்பத்தியாலைகளுக்கு வழங்கும் திட்டமும் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. கூட்டுமுயற்சியினை உருவாக்கும் முடிவை இந்திய பெற்றோலிய வளத்துறை அமைச்சரும் இலங்கையின் திறைசேரி மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் செயலரும் எடுத்துள்ளனர். இச் சந்திப்பில் மன்னார் வளைகுடாவில் எண்ணை அகள்வுக்காக இந்தியாவிற்குத் தரப்படும் என முன்னர் தெரிவிக்கப்பட்ட எம்1 மற்றும் எம்3 துண்டங்களைத் தற்போது பொதுக் கேள்வி முறைக்குள் இலங்கை கொண்டுவந்துள்ளமை பற்றியும் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் ஐ.ஓ.சிக்குச் செலுத்த வேண்டியுள்ள 692 மில்லியன் ரூபாய்க் கடன் பற்றியும் பேசப்பட்டதாகவும் தெரியவருகின்றது.

## காணாமற் போன ஊகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட பிரான்ஸில் உள்ளார்: சுதந்திரக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்

2010ம் ஆண்டின் ஜனவரி 24ம் நாள் காணமற்போய்விட்ட ஊடகவியலாளரான பிரகீத் எக்னெலிகொட நலமாக பிரான்ஸில் இருப்பதாக சுதந்திரக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் அருந்திகா பெர்ணாண்டோ பாராளுமன்றில் இன்று 05.06.2013ல் தெரிவித்துள்ளார்.

2010ம் ஆண்டில் நடைபெற்ற சனாதிபதித் தேர்தலுக்கு இரு நாட்களுக்கு முன்னர் பிரகீத் காணாமற் போயிருந்தார். அவர் பொது எதிர்கட்சி வேட்பாளரான சரத் பொன்சேகாவுக்கு ஆதரவாகக் கடும் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தார். காட்டூன் வரைகலைஞராகப் பிரபலமான இவர் சுயேச்சை ஊடகவியலாளராகவும் செயற்பட்டு வந்தார்.

இவ்வாறே முன்னொரு நாளில் தற்போதைய பிரதம நீதியரசரான மொகான் பீரிஸ் அவர்களும் பிரகீத் வெளிநாடொன்றில் வசிப்பதாக தெரிவித்திருந்தார்.

இக் கூற்றுக்கள் தொடர்பாக பிரகீத் அவர்களின் மனைவி கருத்துத் தெரிவிக்கும்போது "பிரகீத் வெளிநாடொன்றில் வசிக்கின்றார் எனில் அவரை நாட்டுக்குள் கொண்டுவர நடவடிக்கைகளை எடுக்கும்படி அரசிடம் தான் கேட்டுக்கொள்வதாகவும் அவ்வாறான நடவடிக்கைக்குத் தான் பூரண ஒத்துழைப்பை நல்க விரும்புவதாகவும் தெரிவித்துள்ளார்.

## கேட்டு ஆயிரம் நாட்களைக் கடந்தும் மின்சாரம் வழங்கப்படாத 58, தெகிவத்த வீதி

சுமார் மூன்று வருடங்களாக உரிய அதிகாரிகளைக் கேட்டும் மின்சாரம் வழங்கப்படாத நிலையிலுள்ள 58 தெகிவத்த வீதிக்கு மின்சாரத்தைப் பெற்றுக் கொள்வது எவ்வாறு என்றோர் கலந்துரையாடல் 03.06.2013 அன்று பாரதிபுரம் கிராம அபிவிருத்திச் சங்கத்தில் நடந்தேறியுள்ளது. பாரதிபுரம் கிராம அபிவிருத்திச் சங்கத்தினர், மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கத்தினர், ஏனைய மகளிர் சங்கங்கள், விவசாயச் சம்மேளனப் பிரதிநிதிகள், கிரா மீள் எழுச்சகித்திட்ட அலுவலர்கள், அறநெறிப் பாடசாலை அங்கத்தவர்கள்,58 பள்ளிவாசலின் தலைவர் மற்றும் செயலாளர், மற்றும் கிராம மக்கள் கலந்து கொண்ட இக் கலந்துரையாடலை மூதூர் இந்துசமயக் குருக்கள் சங்கத்தினர் ஏற்பாடு செய்திருந்தனர். இக் கலந்தரையாடலின் போது மகஜர் ஒன்றைத் தயாரித்து மின்சாரம் வழங்கும் பொறுப்பிலுள்ள அனைவருக்கும் அனுப்பிவைப்பதற்கான முடிவினை அனைவரும் ஏகமனதாக ஏற்றுக்கொண்டனர். மேலும் இரண்டு முக்கிய தீர்மானங்கள் இக்கலந்துரையாடலில் நிறைவேற்றப்பட்டுள்ளன. அவை முறையே 485 குடும்பங்கள் வாழும் இக்கிராமத்தில் 132 குடும்பங்கள் விதவைகளால் தலைமை தாங்கப்படுவதால் அவர்களுக்குரிய வாழ்வாதார வசதிகளை பெற்றுக் கொடுக்க வேண்டும் என்பதும் பாரதி வித்தியாலத்திற்குச் செல்லும் மணல் வீதியை திருத்துவதற்குப் பிரதேச சபையில் நிதி ஒதுக்கீடு இருந்தும் அவ் வீதி தற்போது வரை திருத்தப்படாமலிருப்பதால் அதனை உடனடியாகத் திருத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் போன்றனவாகும்.

# 15 பில்லியன் இழப்பை திறைசேரிக்கு ஏற்படுத்திய அரச நிறுவனங்கள்

பொது நிறுவனங்களுக்கான பாராளுமன்றக் குழுவின் தலைவரான டி.யூ. குணசேகர சில அரச நிறுவனங்கள் அரச திறைசேரிக்குச் சுமார் பதினைந்து பில்லியன் ரூபா இழப்பை ஏற்படுத்தியுள்ளன என தெரிவித்துள்ளார்.

பொது நிறுவனங்களுக்கான பாராளுமன்றக் குழு ஆறு பிரிவுகளின் கீழ் சுமார் 235 அரச நிறுவனங்களை ஆய்வு செய்துள்ளது.

இவ் ஆய்வின் முடிவிலேயே இந்த விடயம் தெரியவந்துள்ளது. "பொது நிதிமீதான கட்டுப்பாடு" என்பதன் மீது கடும் தாக்கத்தை இந்த இழப்பு ஏற்படுத்தியுள்ளது.

## கொல்லப்பட்ட பெண்ணின் உறுப்பினுள் ஒன்றரை அடி நீளத் துடப்பக்கட்டை

நீர்கொழும்புப் பிரதேசத்தின் சித்திரவதை செய்யப்பட்டுக் கொல்லப்பட்ட பெண் ஒருவரின் உறுப்பினுள் சுமார் ஒன்றரை அடி நீளத் துடைப்பக்கட்டைத் தடி போன்ற ஏதோவொன்று திணிக்கப்பட்டிருக்க வேண்டும் என அவரது சடலத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட மரண விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது. நீர்கொழும்பு வைத்தியசாலையில் தொழிலாளியாகப் பணியாற்றும் ஒருவரின் 58 வயதான மனைவியே இவ்வாறு சித்திரவதைக்குள்ளாகி மரணமாகியுள்ளார்.

இக் கொலை தொடர்பாகச் சந்தேகத்தின் பேரில் விசேட அதிரடிப் படைப்பிரிவின் தொழில்நுட்பப் பிரிவில் கடமையாற்றும் ஒருவர் கைதாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சவூதியில் முறையான விசாவின்றிப் 14,000 இலங்கையர்கள் !

சவூதி அரசு அறிவித்துள்ள தயைநாட்களுக்கு இன்னும் ஒரு மாதம் இருக்கும் நிலையில் தற்போதுவரை சுமார் 14,000 இலங்கையர்கள் அந்நாட்டில் முறையான அனுமதியின்றி இருப்பது தெரியவந்துள்ளதாக அந் நாட்டிலுள்ள இலங்கைத் தூதரகத்தை மேற்கோளிட்டுச் செய்திகள் வெளியாகியுள்ளன.

சவூதி அரசு தனது நாட்டில் முறையான அனுமதியின்றி வேலைசெய்து வரும் பிற நாட்டவர்களைக் கண்டு பிடிப்பதற்காக அவ்வாறானவர்கள் ஜூலை மாதம் 03ம் திகதிக்கு முன் அந்த அந்த நாட்டுத் தூதரகங்களில் தம்மை வெளிப்படுத்தும் பட்சத்தில் தண்டப்பணமோ தண்டனைகளோ வழங்கப்படமாட்டாது எனத் தயை நாட்களை அறிவித்திருந்தது. அவ் அறிவிப்பை அடுத்து தற்போதுவரை இவ்வளவு தொகையான இலங்கையர்கள் தம்மை இலங்கைத் தூதரகத்தில் வெளிப்படுத்தியுள்ளனர்.

இவர்களுட் பலர் காலாவதியான அனுமதியுடனும், சவூதிக்குச் சென்ற இடங்களில் வேலை செய்யாது வேறு இடங்களில் வேலை செய்து வருவபர்களாக இருப்பதும் தெரியவந்துள்ளது. இவர்களை அவர்களது விருப்பத்திற்கு ஏற்ப ஒன்றில் நாட்டுக்கு அழைத்துவரவோ அல்லது தற்போது பணிசெய்யும் இடங்களில் தொடர்ந்து வலுவான அனுமதியுடன் பணியாற்ற அனுமதிப்பதோ நடைபெறவுள்ளது எனவும் தெரியவருகின்றது.

## ஜப்பானிய பியர் போத்தலில் "சிகிரியா"

சிகிரியாவின் படத்தை தனது பியர் போத்தலின் வியாபாரப் பெருக்கத்திற்காகப் பயன்படுத்தியுள்ள ஜப்பானிய பியர்க் கம்பனியின் மீது இலங்கையின் தேசிய பாரம்பரியச் சொத்துரிமை அமைச்சு நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளதாகத் தெரிகின்றது. வரலாற்றுப் புகழ்மிக்க சிகிரியாக் குன்றுகளின் படத்தை பியர் விளம்பரங்களுக்காகப் பாவிப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது எனத் தெரிவித்துள்ள அமைச்சு, இலங்கைக் கம்பனியொன்றால் உருவாக்கப்பட்டுள்ள இவ் விளம்பரத்தை ஊக்கமளிக்கும் குடிவகையொன்றுக்காகவே தாம் பாவிக்கப் போவதாக ஜப்பானியக் கம்பனி தெரிவித்தே பெற்றுக்கொண்டுள்ளது என மேலும் தெரிவித்துள்ளது.

## துபாயில் – இலங்கை முதலீட்டு மாநாடு!

துபாயில் உள்ள இலங்கை பிரதி உயர்ஸ்தானிகராலயமும், இலங்கை பங்குச்சந்தையும் சேர்ந்து இலங்கையில் வெளிநாட்டு முதலீட்டை ஊக்குவிக்குமுகமாக துபாயில் கடந்த சனிக்கிழமை இந்த மாநாட்டை ஏற்பாடு செய்திருந்தது. வெளிநாட்டில் வசிக்கும் பணம்படைத்த இலங்கையர்களை பங்குச் சந்தை மற்றும் இலங்கை கம்பனிகளில் முதலீடு செய்ய ஊக்குவிக்கும் வகையில் இந்த மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டது. துபாயில் உள்ள இலங்கைக்கான கொன்சல் ஜெனரல் எம்.எம்.அப்துல் ரஹீம் தலைமையில் இடம்பெற்ற இந்த மாநாட்டில் இலங்கையில் இருந்து சென்ற பங்குச்சந்தை மற்றும் நிதித்துறை சார்ந்த பிரமுகர்கள் பிரதான உரை நிகழ்த்தினர்.

சுமார் 100 க்கும் மேற்பட்ட துபாயில் வசிக்கும் இலங்கை வர்த்தகர்கள் மற்றும் வங்கி , நிதித்துறை சார்ந்த உயர் அதிகாரிகள் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். இலங்கையில் பயங்கரவாதம் முடிவுற்று நான்கு ஆண்டுகள் கடந்து விட்ட நிலையில் இலங்கைக்கான வெளிநாட்டு முதலீட்டை மேலும் ஊக்குவிக்குமுகமாக இந்நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகுடம் மலையகச் சிறப்பு மலர் மிகக் கவனிப்புக்குரிய மலராக மலர்ந்துள்ளது

கலாநிதி. ந. இரவீந்திரன

இது காலவரை வெளியிடப்பட்ட மலையகச் சிறப்பு மலர்களில் 'மகுடம்' மலையகச் சிறப்பு மலர் மிகக் கவனிப்புக்குரிய இதழாக தன்னை அடையாளப்படுத்தியுள்ளது. அழகியல், அமைப்பு, உள்ளடக்கம் என அத்தனை விடயங்களிலும் மகுடம் ஈழத்து சிற்றிதழ்களில் மகுடமாக திகழ்கிறது என கலாநிதி. ந. இரவீந்திரன் குறிப்பிட்டார்.

மட்டக்களப்பில் இருந்து வெளிவரும் மகுடம் கலை இலக்கிய சமூக பண்பாட்டுக் காலாண்டிதழின் மலையகச் சிறப்பிதழ் அறிமுக விழா அண்மையில் ஹட்டன் ஹைலன்ஸ் கல்லூரி பிரதான மண்டபத்தில் கலாநிதி. ந. இரவீந்திரன் அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

தொடர்ந்து அவர் தனது தலைமையுரையில் மலையகம் தேசியத்தின் ஒரு பகுதியாக தன்னை இணைத்து வெகுகாலமாகிவிட்டது. 21ம் நூற்றாண்டின் புதிய கருத்துருவாக்கங்கள் சார்ந்து அது தன்னை வெளிப்படுத்தவேண்டிய தேவையில் உள்ளது. மலையகத்தின் நவீன இலக்கியத்தின் முன்னோடி யார் என்ற பிரச்சினை இன்றும் உள்ளது. அந்த வகையில் 'மகுடம்' தனது படைப்புக்களில் ஆய்வு ரீதியாக மலையகம் தொடர்பான பல புதிய தகவல்களை தருகின்றது. தேசிய இனத்தின் அங்கமாக பார்க்கப்படவேண்டிய சமூக உருவாக்கம் என்பது மிகமுக்கியமானது. சமூக அசைவியக்கம் என்ற வளர்ச்சிப் போக்கில் புதிய எண்ணக் கருக்களை அடையாளப்படுத்த வேண்டிய தேவை உள்ளது. மகுடம் தனது எந்த ஒரு பக்கத்தினையும் வீனாக்காமல் தனது பணியை செவ்வனே நிறைவேற்றியுள்ளது. என்றார்.

கவிதைகள் தொடர்பான விமர்சனவுரையாற்றிய மலையகத்தின் பிரபல கவிஞர் சு. முரளிதரன் தனதுரையில் "இனிமேல் மலையகக் கவிஞர்கள் என்ற அடையாளம் தேவையில்லை. மகுடத்தில் வெளிவந்திருக்கும் மலையகக் கவிஞர்களின் கவிதைகளை படிக்கும்போது அவர்கள் ஈழத்து கவிஞர்களாக தம்மை நிலைநிறுத்தி வருவது தெளிவாகின்றது. அந்த வகையில் 'மகுடம்' போன்ற சிற்றிதழ்கள் மலையகம் நோக்கி வருவது மலையகத்திற்கு கிடைத்த பெருமையாகும் என்றார்."

சிறுகதைகள் பற்றிய தனது உரையில் பிரபல எழுத்தாளர் மு. சிவலிங்கம் அவர்கள் 'மகுடத்தில் வெளியாகியுள்ள மூன்று சிறுகதைகளும் இன்றைய தமிழின் நவீன சிறுகதை வளர்ச்சிப் போக்கை முன்னிறுத்தி புதிய முறையில் படைக்கப்பட்டுள்ளது என்றார்.

விமர்சனவுரையாற்றிய பேராதனை பல்கலைக்கழக தமிழ்த்துறை விரிவுரையாளர் பெ. சரவணகுமார் முற்றுமுழுதாக மலையகச் சிறப்பிதழாக வெளிவந்திருக்கும் மகுடம் மலையகத்தின் நவீன இலக்கியத்தின் குறிகாட்டியாக அமைந்துள்ளது. அதன் அமைப்பும், ஆக்கத் தேர்வும் தென்னிந்திய சிறு சஞ்சிகைகளுக்கு சவால்விடும் வகையில் அமைந்துள்ளது. மகுடத்தின் மகுடவாசகம் கூட மலையக மக்களுக்கு மிகப் பொறுத்தமானதாகவே அமைந்துள்ளது என்றார்.

பெருவிரல் கலை இலக்கிய அமைப்பின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்வினை மத்தனை வே. தினகரன் தொகுத்து வழங்க வரவேற்புரையை கவிஞர். ச. சிவகுமாரும், இதழ் அறிமுகத்தினை சு. தவச்செல்வனும், நன்றியுரையினை கவிஞர். ஜெ. பியானும் ஆற்றினர். துறைசார் விமர்சனத்தை கிங்ஸ்லி கோமசும், சிவலிங்கம் சிவகுமாரும் ஆற்ற ஏற்புரையை மகுடம் சஞ்சிகை ஆசிரியர் வி. மைக்கல் கொலின் ஆற்றினார்.

# இலங்கை இளைஞர் பாராளுமன்றம் தெளிவும்.. நோக்கமும்.. - 1

இலங்கை சனநாயக குடியரசின் அரசியல் முறைமைகளில் 2011ம் ஆண்டு கொண்டுவரப்பட்ட புதிய வடிவமாக காணப்படும் இளைஞர் பாராளுமன்றத்தின் இரண்டாவது தேர்தல் கடந்த மாதம் இடம்பெற்று முடிந்த நிலையில் இவ் இளைஞர் பாராளுமன்றத்தின் நோக்கமும், அதன் செயன்முறைகளும் இலங்கை அரசியலில் எத்தகைய அழுத்தங்களைப் பிரயோகிக்கப் போகின்றன. அதுவும் மூன்று தசாப்தங்களுக்கு மேலாக இனப் பிறழ்வுகளை எதிர்நோக்கியிருக்கும் எமது நாட்டில் நியாயமான அரசியல் நடுநிலையத்தை ஏற்படுத்துவதில் இப் பராளுமன்றின் பங்கு கேள்விக்குறியானதொன்றாகவே இருக்கப்போகின்றது.

இளைஞர் விவகார மற்றும் திறன் அபிவிருத்தி அமைச்சின் கீழ் செயற்படுத்தப்பட்டுவரும் இப் பாராளுமன்றத்தில் இன்றைய நிலையில் 412 உறுப்பினர்கள் அங்கம் வகிக்கின்றனர். இலங்கையின் 335 பிரதேச செயலாளர் பிரிவுகளிலிருந்து தலா ஒருவர் வீதமும் நேர்முகப் பரீட்சைகளின் மூலம் தெரியப்பட்ட 77 செனட் சபை உறுப்பினர்களும் அடுத்துவரும் ஒரு வருடகாலப்பகுதிக்கு இவ் இளைஞர் பாராளுமன்றை பிரதிநிதித்துவப்படுத்த உள்ள நிலையில், இதன் பிரதான நோக்கம் இளைஞர்களின் திறன் அபிவிருத்தி மற்றும் தலைமைத்துவப் பண்புகளை மேலோங்கச் செய்தலினூடாக எதிர்காலத்துக்கு உரம் மிக்க அரசியல் தேர்ச்சியுடைய தலைவர்களை உருவாக்குதலாக அமைந்திருக்கிறது.

கடந்த மாதம் 23ம் திகதி உலக இளைஞர்கள் தினத்தன்று இலங்கைச் சனாதிபதியால் ஆரம்பித்து வைக்கப்பட்ட இவ் இரண்டாவது பாராளுமன்றின் ஆளுங்கட்சி, எதிர்க்கட்சித் தெரிவு, அமைச்சரவைத் தெரிவு, உறுப்பினர்கள் தெரிவென்பன களத்தகுதிகளின் செயற்பாட்டால் நிர்ணயிக்கப்பட்டிருந்தாலும் இவற்றின் ஒட்டுமொத்த முடிவுகள் கூட ஓரினத்தன்மையுடையனவாய் இருந்ததை அவதானிக்க முடிந்தது.

இவை இவ்வாறிருக்க இவ் இளைஞர் பாராளுமன்றம் பற்றியதான அடிப்படைத் தெளிநிலை இன்னும் சமுதாயத்தில் ஏற்படுத்தப்படவில்லை. இத் தெளிநிலைகள் குறித்து ஆராய்தல் எதிர்காலத்தில் இளைஞர் பாராளுமன்றத்திற்கு தெரியப்படும் உறுப்பினர்களுக்கு வாய்ப்பாக இருப்பதோடு எதிர்காலத்தில் இம் மன்றின் நிலைத்திரு நிலையையும் உறுதி செய்யும்.

தில்லைநாதன் பவித்ரன்
மனிதவள மற்றும் மூலதனவளப் பிரதி அமைச்சர்
இலங்கை இளைஞர் பாராளுமன்றம்




# இராவணன்

## இராவணன் காலத்து ஆலயங்கள்

திருக்கேதீசுவரம் 1930களில்

இந்தப்பதிவில் இராவணன் காலத்து ஆலயங்கள், இராவணனின் வேறு சில வரலாற்று எச்சங்கள் சிலவற்றைப் பார்க்கலாம். இராவணன் காலத்து ஆலயங்கள் என்று குறிப்பிடுவதனால் அவை இராவணனால் கட்டப்பட்டன என்று பொருள் இல்லை. விஜயன் வருகைக்கு முன்னரே இலங்கையில் இருந்த சைவாலயங்கள் என்று இவற்றைக்கூறலாம். விஜயனின் வருகைக்கு முன்னர் இலங்கையில் வாழ்ந்த இயக்கர் நாகரின் ஆட்சியில் அக்காலத்து மன்னர்களால் இக்கோவில் கட்டப்பட்டதாக கூறப்படுகின்றது. அக்கால மன்னர்களில் இராவணன் குறிப்பிடக்கூடிய ஒருவனாகையால் இவ்வாறு இராவணன் காலத்து சைவாலயங்கள் என்று குறிப்பிட்டேன். "வித்துசேசன் இருபத்தொன்பது வருடங்களும், மூன்று மாதங்களும் இலங்கையை ஆண்டான். இவனுக்குப் பின் இவனது மகன் சுகேசன் என்பவன் மணிபுரம் என்னும் கதிரவன் மலையைத் தலைநகராக்கி இலங்கையை ஆட்சி புரிந்தான். ஆதிகாலத்தில் மயனால் கட்டப்பட்ட திருக்கேதீசுவரம், முனீசுவரம், நகுலேசுவரம் என்னும் சிவாலயங்களை சுகேசன் பழுது பார்த்து அவற்றுக்கு அநேக நகைகளையும், நிலங்களையும் கொடுத்தான்." இவ்வாறு கணபதிப்பிள்ளையின் இலங்கையில் புராதன சரித்திரம் என்ற நூலில் கூறப்படுகின்றது. சுகேசன் என்பவன் இராவணனுக்கு முன்னைய காலத்தில் இலங்கையில் ஆண்ட ஒரு மன்னன் என்பது பற்றி முந்தய பதிவில் பார்த்தோம்.



இதைவிட.....இலங்கையில் இம்மன்னன் சமய வழிமுறைகளை சரியாக கடைப்பிடித்தான். இலங்கையில் ஆட்சியை அமைக்கு முன்னரே நாலு திசைகளிலும் சிவாலயங்களை எழுப்பினான். கீழ்திசையில் கோணேசர கோவிலையும், மேலதிசையில் கேதீச்சர கோவிலையும் பழுதுபார்த்து. அக்கோவில்களில் பூசை நடாத்தும் பொருட்டு காசிப் பிராமணர்களை அழைத்துவந்தான் எனக் யாழ்ப்பாண வைபமாலையில் கூறப்படுகின்றது. இதிலிருந்து விஜயனின் வருகைக்கு முன்னரே இலங்கையில் இருந்த ஈழத்தின் பழமைவாய்ந்த சைவாலயங்கள் இவை என்பதை நாம் அறிந்து கொள்ளலாம். இவ்வாலயங்கள் பற்றி சுருக்கமாகப் பார்க்கலாம். திருக்கேதீஸ்வரம் இலங்கையின் மேற்குக் கடற்கரைப் பகுதியிலுள்ள மன்னார் மாவட்டத்தில் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த துறைமுக நகரமான மாதோட்டத்தில் அமைந்துள்ள ஒரு சிவன்கோவில். ஈழத்தின் பழங்குடியினரான நாகர்களது முக்கிய வழிபாட்டுத் தலமாதலால் இத்திருக்கோயிலிற்கு நாகநாதர் எனவும் பெயர் வழங்கி வந்துள்ளது. இச்செய்தியால் சைவசமயிகளின் தொன்மையையும் பெருமையையும் இத்திருக்கோயில் இயம்புகின்றது. திருக்கோணேச்சரம் (திருக்கோணேஸ்வரம்) இலங்கையில் திருகோணமலையில் உள்ள திருஞானசம்பந்தரின் பாடல் பெற்ற தலமாகும். இதுவும் இலங்கையின், புகழ்பெற்ற ஆலயங்களுள் ஒன்றாக விளங்குகின்றது. உலகில் உள்ள வழிபாட்டுத் தலங்களில் மிகப்பழமையான இவ் வாலயத்தை இலங்கையை ஆண்ட மனு மாணிக்கராஜா என்ற மன்னன் கி.மு. 1300ஆம் ஆண்டிற்கு முன்னர் இக்கோயிலைக் கட்டினான் என்று சான்றுகள் கூறுகின்றன. சிவபக்தனாகிய இராவணனால் இங்குள்ள சிவலிங்கம் தாபிக்கப்பட்டதாக ஐதீகம். இதுதவிர புத்தளம் மாவட்டத்தில் சிலாபம் என்ற இடத்தில் காணப்படுகின்ற முன்னேஸ்வரம், வடபதியில் கீரிமலைப்பகுதியில் அமைந்துள்ள நகுலேஸ்வரம், தென்பகுதியில் காணப்படுகின்ற தொண்டீஸ்வரம் (சரியாக தெரியவில்லை) என்பன இலங்கையில் ஆதிக்குடிகளான இயக்கர் நாகர் என்ற இனத்தவர்கள் காலத்து ஆலயங்களாகும். இவ்வாலயங்கள் யாரால் கட்டப்பட்டன என்பது பற்றி எந்த தகவலும் இல்லை என்றே கருதுகிறேன். இவ்வாலயங்கள் பற்றிய பழைய புராணக் கதைகளை பற்றி அறிய முற்பட்ட போதிலும்.. அவை பற்றி எனக்கு ஏதும் தெரியவில்லை. வாசகர்கள் யாராவது தெரிந்திருப்பின் குறிப்பிடலாம். அல்லது அவைகள் பற்றி அறியும்போது அவற்றை இங்கு நான் இணைத்துவிடுகிறேன். இங்கு மிகவும் வேதனைப்படக்கூடிய விடயம் என்னவெண்றால்.... தமிழர்களின் தொன்மையைக்கூறும் இவ்வாலயங்கள் சில இன்று சிங்கள மயப்படுத்தப்பட்ட சிங்களவர்கள் வாழும் பகுதியில் அமைந்துள்ளன. உதாரணமாக கதிர்காம முருகன் ஆலயத்தையும், மாத்தறை மாவட்டத்தில் தேவேந்திர முனையில் அமைந்துள்ள தொண்டீஸ்வரர் ஆலயத்தையும் குறிப்பிடலாம். போத்துக்கீசரால் அழிக்கப்பட்ட இத் தொண்டீஸ்வரர் ஆலயம் சிங்கள மக்களால் விஸ்ணு ஆலயமாக மாற்றப்பட்டுள்ளது.

*(இன்னும் நடுவோம்)*

செந்தூரன்

**சிறுவர் உரிமைகளைப் பாதுகாப்போம்**

**குற்றங்கள் நிகழும் பொழுதில் அழையுங்கள் தொலைபேசி எண்**

**1929**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# முரசின் உலக வலம்

## மூன்று நாட்களில் 253 கோடி செலவிட்ட சவூதி இளவரசர்



சவூதி அரேபிய இளவரசர் பஹாட் அல் சவுத் 3 நாள் களியாட்டங்களுக்காக 20.41 மில்லியன் அமெரிக்க டொலர்களை செலவிட்டமை தொடர்பில் சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இளவரசர் பஹாட் அல் சவுத், அமெரிக்காவில் உள்ள ஸ்டேன்்.போர்ட் பல்கலைக்கழகத்தில் பொறியியல் படித்து வருகிறார். சமீபத்தில் இவருக்கு பல்கலைக்கழக பட்டமளிப்பு விழா நடைபெற்றுள்ளது. இதனையடுத்து, பிரான்ஸ் தலைநகர் பெரிசில் உள்ள டிஸ்னி லேண்டில் தனது கல்லூரி நண்பர்களுக்கு விருந்தளிக்க இளவரசர் முடிவு செய்தார்.

சுமார் 60 நண்பர்களுடன் டிஸ்னி லேண்டிற்கு சென்றுள்ள இளவரசருக்காக அங்குள்ள கலைஞர்கள் சிறப்பு காட்சிகளை நடத்தி மகிழ்வித்துள்ளனர்.

மூன்று நாட்கள் நடைபெற்ற இக் கேளிக்கைகளுக்காக 20.41 மில்லியன் அமெரிக்க டொலர்களை (இலங்கை மதிப்பில் சுமார் 253 கோடி ரூபாய்) செலவிட்டுள்ளார். இளவரசரது செலவீனங்கள் தொடர்பில் தற்போது பரபரப்பாக பேசப்பட்டு வருகின்றது. குறிப்பாக ஐரோப்பிய ஊடகங்கள் இதற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மைக்கல் ஜக்சனின் மகள் பாரிஸ் தற்கொலை முயற்சி

மறைந்த பிரபல பொப் பாடகர் மைக்கல் ஜக்சனின் மகள் பாரிஸ் தனது கையை கிழித்துக் கொண்டு தற்கொலைக்கு முயற்சி செய்துள்ளார். இதைப் பார்த்த அவரது குடும்பத்தினர் அவரை லொஸ் ஏஞ்சல்ஸில் உள்ள வைத்தியசாலை ஒன்றில் அனுமதித்துள்ளனர்.



அங்கு அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாகவும் அவர் விரைவில் நலமாகிவிடுவார் எனவும் வைத்தியசாலை வட்டாரங்கள் குறிப்பிட்டுள்ளன.

பாரிஸ் தனது டுவிட்டரில், கண்ணீர் ஏன் உப்பாக இருக்கிறது? என் துன்பங்கள் எல்லாம் வெகு தூரம் சென்றது போன்று உள்ளது. அவை எல்லாம் இங்கே இருக்க வந்தது போன்று தெரிகிறது என்று தெரிவித்துள்ளார்.

மைக்கல் ஜக்சன் கடந்த 2009ஆம் ஆண்டு ஜூன் மாதம் இறந்தார். அவருக்கு பிரின்ஸ், பாரிஸ் மற்றும் பிளாங்கெட் ஆகிய 3 குழந்தைகள் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இஸ்ரேலிய இராணுவப் பெண்களின் தகுதியற்ற நடத்தை

இஸ்ரேலிய இராணுவத்தில் பணிபுரியும் பெண்களிற் சிலர் மேலாடை அணியாமல் வெறும் உள்ளாடையுடன் இராணுவசாதன காவுடையைத் தரித்தவண்ணம் எடுத்திருந்த சலனப் படங்கள் வலைப்பின்னற் பக்கம் ஒன்றில் வெளியானதைத் தொடர்ந்து அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க இஸ்ரேலிய இராணுவம் தயாராகி வருகிறது.

இஸ்ரேலிய செய்திப் பக்கமொன்றில் இவ்வாறான இரு சலனப் படங்கள் வெளியாகியிருந்தன. அதனைத் தொடர்ந்து அவர்களின் மீது நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளதாக அறிவித்துள்ள இஸ்ரேலிய இராணுவம் இச் செயலானது "தகுதிக்கு அப்பாற்பட்ட நடத்தை" என தனது கண்டனத்தையும் வெளியிட்டுள்ளது.



## கேம்பிறிஜ் பல்கலைக்கழக சட்டத்துறை வினாத்தாளில் பாலியல்க் குதர்க்கக் கேள்விகள்

கடந்த வாரம் நடைபெற்ற கேம்பிறிஜ் பல்கலைக்கழக சட்டத்துறைப் பீட வினாத்தாளினை வாங்கி வாசித்த மாணவர்கள் அதிர்ந்துபோன சம்பவமொன்று நிகழ்ந்துள்ளது. பொதுவாகவே உண்மைச் சம்பவங்களை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்படும் அவ் வினாத்தாளின் படங்களும் விடயங்களும் கல்லூரியொன்றின் விழாவொன்றில் நிகழ்ந்ததாகக் புனையப்பட்ட பாலியல் மற்றும் வன்புணர்வுக் கதைகளை அடிப்படையாகக் கொண்டிருந்தமையால் பரீட்சை எழுதிய சுமார் 200 மாணவர்களும் சிறிது அசூசை அடைந்திருந்ததாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

## செவ்வாய்க் கிரகத்தில் அதிக கதிர்வீச்சு

எதிர்காலத்தில் செவ்வாய்க் கிரகத்திற்கு செல்லக்கூடிய விண்வெளி வீரர்கள் கடுமையான கதிரியக்கத் தாக்கத்துக்கு உள்ளாக நேரிடும் என்று அமெரிக்காவின் விண்வெளி ஆய்வு நிறுவனமான நாசா எச்சரித்துள்ளது.

பாதுகாப்பு விதிமுறைகள் உடன்படும் அளவைவிட கூடுதலான அளவுக்கு அங்கு கதிர்வீச்சுத் தாக்கத்துக்கு விண்வெளி வீரர்கள் இலக்காக நேரிடும் என்று நாசா கூறுகிறது.

உயிராபத்தை ஏற்படுத்தக்கூடிய புற்றுநோய்களுக்கான அபாயத்தை அதிகரிக்கக்கூடிய அளவில் இந்த கதிர்வீச்சு இருக்கும் என்றும் விண்வெளி வீரர்களை நாசா எச்சரித்துள்ளது. கியூரியாசிட்டி ரோவர் விண்ணூர்தியைக் கொண்டு நடத்தப்பட்ட ஆய்வின் முடிவுகள் மூலம் இதனை நாசா உறுதிப்படுத்தியுள்ளது.

செவ்வாயின் தரையில் ஊர்ந்துசென்று ஆய்வு நடத்திய ஒரு கார் அளவிலான இந்த ரோபோ-ஊர்தியை அங்கு கொண்டுசெல்லும் அரை-பில்லியன் கிலோமீட்டர் தூர பயணத்துக்கு 8 மாதங்களுக்கும் அதிககாலம் எடுத்துள்ளது.

## ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சைக்கான பயிற்சிகள் – 18

பிரதீபா

1. கிழக்கு மாகாண மக்களை டெங்கு எனும் நோய் மிகவும் வதைக்கின்றது. இங்கு நோய் என்பதன் ஒத்த பொருள் தரும் சொல் எது?
   1. துயர் 2. பிணி 3. இடர்

2. இரவு வானில் விண்மீன்கள் மிகவும் பிரகாசித்துக் கொண்டிருக்கும். விண்மீன் என்பதன் ஒத்த பொருள் தரும் சொல் எது?
   1. தாரகை 2. அம்புலி 3. சுக்கிரன்

3. "எதையும் உரிய முறையில் செய்யா விட்டால், அதனால் ஏற்படவுள்ள பயன் குறையும்" என்பதைக் குறிப்பது
   1. ஆறின கஞ்சி பழங்கஞ்சி 2. ஒரு பானைச் சோற்றிற்கு ஒரு சோறு பதம்
   3. ஆறிலும் சாவு, நூறிலும் சாவு

4. பசியினால் வாடிய நரி ஒன்று இரை தேடிச் செல்லும் போது திராட்சைக் குலை ஒன்றைக் கண்டு அதனைப் பறித்துத் தின்றது. இதிலுள்ள கருத்து பிழையாவதற்கு காரணமான விடயம் எது?
   1. நரிக்குப் பசி ஏற்படுவதில்லை.
   2. நரி இரை தேடிச் செல்வதில்லை.
   3. நரி திராட்சையை உணவாகக் கொள்வதில்லை.

5. மழை வருவதற்கு முன் பெண் மயில் தோகை விரித்து ஆடியது. இக்கூற்றிலுள்ள கருத்துப் பிழை எது?
   1. பெண் மயிலுக்கு அழகான தோகை காணப்படுவதில்லை
   2. ஆண் மயிலே அழகாகத் தோகை விரித்தாடும்.
   3. கோழிகள் மனிதனைத் துயில் எழுப்புவதில்லை.

6. வீட்டுத் தோட்டத்திலே அதிக எண்ணிக்கையில் பூஞ்செடிகள் உள்ளன. எல்லாப் பூஞ்செடிகளிலும் பூக்கள் உள்ளன. எனினும் பூக்கள் உள்ள செடிகளில் சில பூஞ்செடிகள் அல்லாதவையாகும். இவ்விபரங்களின் படி சரியான கூற்று எது?
   1. பூக்கள் உள்ள எல்லா மரங்களும் பூஞ்செடியாகும்.
   2. தோட்டத்தில் எல்லா மரங்களிலும் பூக்கள் உண்டு
   3. பூஞ்செடி அல்லாத சிலவற்றில் பூக்கள் உண்டு

**7ம், 8ம் வினாக்களுக்கு பின்வரும் அறிவித்தலை வாசித்து விடையளிக்குக.**

**அறிவித்தல்**

பருவ மழையுடன் நுளம்புகள் பெருகி டெங்கு நோய் பரவும் அபாயம் உள்ளமையால் உங்கள் சுற்றாடலை நுளம்புகள் பெருகாதவாறு சுத்தமாக வைத்திருங்கள். சுற்றாடலில் நுளம்பு பெருகுவதற்கு இடமளிப்போருக்கு தண்டனை வழங்கப்படும். - பொதுச்சுகாதாரப் பரிசோதகர்-

7. இந்த அறிவித்தல் யாருக்கு வழங்கப்பட்டுள்ளது?
   1. பொதுமக்கள் அனைவருக்கும்
   2. சுற்றாடலை சுத்தமாக வைத்திருக்காதோருக்கு
   3. நுளம்பு பெருகும் அபாயமுள்ள இடங்களில் வசிப்போருக்கு

8. இந்த அறிவித்தல் மூலம் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் செய்தி எது? 1. சுற்றாடல் தொடர்பான விழிப்புணர்வு
   2. டெங்கு நோய் அபாயம் பற்றிய எச்சரிக்கை
   3. சுற்றாடலை சுத்தமாக வைத்திருப்போருக்கு தண்டனை வழங்குல்

9. வேலையை இலகுவாக்கப் பயன்படுத்தப்படும் இவ் உபகரணத்தின் உபயோகம் என்ன?



   1. கிணற்றிலிருந்து நீர் இறைக்கப் பயன்படுகிறது.
   2. மாசி, பாக்கு, மரமஞ்சள் போன்றவற்றை நறுக்க எதவுகிறது
   3. நெல்லிலிருந்து உமி, தவிடு அகற்றி அரிசியாக்க உதவுகிறது.

10. அனுலாவிடம் சகிலாவிடமுள்ள பணத்தை விட மூன்று மடங்கு பணம் கூடுதலாக உள்ளது. அனுலா தன்னிடமுள்ள பணத்திலிருந்து ரூபா 75 ஐ சகிலாவுக்குக் கொடுத்தால் இருவரிடமும் உள்ள பணத்தொகை சமமாகும். அனுலாவிடம் இருந்த பணத்தொகை எவ்வளவு?
   1. ரூபா 150 2. ரூபா 225 3. ரூபா 300

11. நான்கு மாணவர்கள் பாடசாலைக்கு வந்த நேரங்கள் பின்வருமாறு .
   சுரேஸ் - 7.00 நாதன் - 6.45 அபி - 6.15 டானி - 6.25
   இம் மாணவர்கள் நால்வரும் பாடசாலைக்கு வருகை தந்த ஒழுங்கு வரிசையை குறிக்கும் சரியான விடை யாது?
   1. அபி, நாதன், டானி, சுரேஸ் 2. அபி, டானி, நாதன், சுரோஸ்
   3. சுரேஸ், நாதன், டானி, அபி

12. ஒரு குழுவிலுள்ள மாணவர்கள் ஒருவருக்கொருவர் காலை வணக்கம் தெரிவித்துக் கொண்டால், இம் மாணவர்களிடையே பரிமாறிக் கொள்ளப்பட்ட காலை வணக்கங்களின் எண்ணிக்கை யாது?
   1. 9 2. 90 3. 100

13. ஒரு மீற்றர் கம்பியை வாங்குவதற்கு ரூபா 40 தேவை. 4மீ 25செ.மீ கம்பியை வாங்குவதற்கு தேவையான பணம் எவ்வளவு?
   1. ரூபா 160 2. ரூபா 170 3. ரூபா 180

14. ஒரு பூந்தோட்டத்தில் ரோசா, மல்லிகை, லில்லி, சாமந்தி எனும் பூஞ்செடிகள் ஒழுங்கு முறைப்படி மாறிமாறி நடப்பட்டுள்ளன. இதில் 31வது பூஞ்செடியின் பெயர் என்ன? 1. மல்லிகை 2. சாமந்தி 3. லில்லி

பெயர்: ..............................................................

..............................................................

முகவரி: ..............................................................

..............................................................

..............................................................

பாடசாலை: ..............................................................

## தரம் ஐந்து மாணவர்களுக்கான புலமைப் பரிசிற் போட்டி

மேலுள்ள கேள்விகளுக்கான சரியான விடைகளை குறித்து அனுப்பி வாராந்தம் பரிசில்களை வெல்லுங்கள்.

மேலுள்ள கேள்விப் பகுதியை நிரப்பி வெட்டி அதனை மலைமுரசு, இல 159 A, கடல் முக வீதி திருக்கோணமலை என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள். வாராந்தம் பரிசுகளை வெல்லுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடம் புரளும் கிழக்கின் மாகாண சபை ?

மாயன்

சுமார் ஒருவயதைக் கூடக் கடக்க முடியாமல் கிழக்கின் மாகாண சபை பரிதவிப்பதை கடந்த சில மாதங்களாகவே கவனிக்க முடிகின்றது.

அரசியல் அதிகாரங்கள் இரண்டு எதிர் எதிர்த் துருவங்களில் நிலை கொள்ள முயற்சிப்பதால் பொதுவாகவே இலங்கையின் பல விடயங்களில் தளம்பல்களைக் கடந்த வருடங்கள் பதிவு செய்து வருகின்றன. அவ்விரு துருவங்களும் முறையே மக்களை மேய்ப்பதற்காகவே அரசியல் அதிகாரங்கள் என எண்ணத் தலைப்படும் அதிகார வர்க்கமாகவும் மறு முனையில் மக்களுக்குச் சேவை செய்யவே அதிகாரங்கள் என எண்ணும் சனனாயக வர்க்கமாகவும் அரசியலில் மேலெழுந்துள்ளன. இவ்விரு துருவங்களுக்கும் இடையிலான இழுபறியாக மக்களும் அவர்களின் சேவை நலன்களும் அல்லாடிக் கிடக்கின்றன.

கிழக்கின் தேர்தலின் போது உயிரோடிருந்த சனனாயகம் மாகாண சபையை அமைக்கும் கூட்டணிகளின் உருவாக்கத்தின் போது செத்துச் சுன்னாம்பானதை எனது முன்னைய கட்டுரையில் தெளிவாகத் தெரிவித்திருந்தேன்.

அதன் சாராம்சம் யாதெனில் கிழக்கின் பெரும்பான்மைச் சமூகத்தால் தெரிவு செய்யப்பட்டவர்கள் கிழக்கு மாகாண சபையின் ஆட்சியைக் கைப்பற்ற முடியாது போய் இருந்ததே ஆகும் என்பதே. அதாவது தனித்தனிக் கட்சிகள் பெற்ற ஆசனங்களில் மிக அதிகமான அசனங்களை, 11 ஆசனங்கள், கைப்பற்றிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்போ அல்லது அதற்கு அடுத்த நிலையில் 07 ஆசனங்களைக் கைப்பற்றியிருந்த முஸ்லிம் காங்கிரசோ கிழக்கின் ஆட்சியை முழுவதுமாகக் கைப்பற்ற முடியாமல் போனபோது அங்கு சனனாயகம் செத்தப் போனது என்பதும் சனனாயகப் போர்வையில் முதலாளித்துவம் " கூட்டணி " என்னும் கொடுங்கரங்களைக் கொண்டிருப்பதும் தெளிவாகத் தெரிந்தது.

கூட்டணி என்ற அமைப்பினுள் 06 கட்சிகள் தமது ஆசனங்களை ஒன்றிணைத்து கிழக்கு மாகாண சபையை உருவாக்க முயற்சித்த போது முஸ்லிம் காங்கிரஸ் தனது ஆசனங்களைத் தாரைவார்த்து மத்தியில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் தலைமையில் கிழக்கில் மாகாண ஆட்சியை ஆளும் கூட்டமைப்பு அமைக்க வழிகோலியது. அன்றைய தினத்தில் முதலமைச்சர் பதிவியை விட்டுத்தரத் தயாராக இருந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் சேராமல் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புடன் முஸ்லிம் காங்கிரஸ் இணைந்தமையானது இலங்கையில் மேலும் பலத்துடன் தமது மக்களுக்குச் சேவையாற்றக் கூடிய ஒரு தந்திரோபாய நகர்வாக அக் கட்சியினால் கருதப்பட்டது. ஏனெனில் இவ்வாறு கிழக்கில் இணைவதற்காக அக் கட்சி பெற்றுக்கொண்டவை யாதெனில் கிழக்கு மாகாண சபையில் இரண்டு அமைச்சர் பதவிகளும் மத்திய அரசில் சில பிரதி அமைச்சர் பதிவிகளும் ஆகும்.

இதே வேளை கிழக்கில் தமிழத் தேசியக் கூட்டமைப்புடன் முஸ்லிம் காங்கிரஸ் இணைந்திருக்குமாயின் அவ் இணைவால் அரசியற் பதவிகள் என்ற அடிப்படையில் பார்த்தால் கிடைத்திருக்கக் கூடிய நன்மை கிழக்கில் மட்டும் பெறுமதியாக இருந்திருக்குமே ஒழிய மத்தியில் அச் செயற்பாடு எவ்வித அனுகூலத்தையும் மு.காவிற்குப் பெற்றுத் தந்திருக்காது. எனவே தான் குறுங்காலத் திட்டமிடலின் அடிப்படையில் கிழக்கில் அரசுடன் இணைந்து ஆட்சியமைக்க மு.கா முடிவெடுத்திருந்தது.

ஆனால் இவ் இணைவால் நீண்டகால அடிப்படையில் மு.கா. என்னென்வற்றை இழக்கப் போகின்றது என்பதை எனது முன்னைய கட்டுரையான " மு.கா வின் இணைவு -தலையிடி யாருக்கு" என்ற தலைப்பில் விலாவாரியாக அலசியிருந்தோம்.

கிழக்கு மாகாண சபையை ஆளுங்கட்சி தனது கட்டுக்குள் கொண்டுவர வேண்டிய அத்தியாவசியத் தேவை அன்றைய காலகட்டத்தில் ஆளுமு: ஐ.ம.சு.கூட்டமைப்பு அரசிற்கு இருந்தது. ஏனெனில் அக் காலத்தில்-தான் திவிநெகும சட்ட மூலத்தை இயற்றிக்கொள்ள மாகாண அரசுகளின் அனுமதி தேவையாக இருந்தது. எனவே எப்பாடு பட்டேனும் கிழக்கில் ஆட்சியைக் கைப்பற்றும் முடிவிலிருந்த அரசு தனது எண்ணத்தை வெற்றிகரமாக அப்போது நிறைவேற்றிக் கொண்டது.

தற்போதுதான் கிழக்கு மாகாண சபையில் அங்கம் வகிக்கும் மு.காவின் அமைச்சர்களுக்கும் உறுப்பினர் களுக்கும் அரசின் திட்டம் தெளிவாகத் தெரியத் தொடங்கியுள்ளது.

சுமார் நான்கு மாதங்களுக்கு முன்னர் முதற் தடவையாக கிழக்கின் மு.காவின் அமைச்சர் ஒருவர் வெளிப்படையாக கிழக்கின் முதலமைச்சரின் வினைத்திறனைக் குறை கூறி ஊடகங்களில் அறிக்கை யொன்றை விடுத்திருந்தார்.

அதைத் தொடர்ந்து கிழக்கின் மாகாணசபையில் உள்ளகப் பிரச்சனைகள் வெளிக்கிளம்பத் தொடங்கியிருந்தன.

கிழக்கின் மாகாண சபையின் கட்டமைப்பை புரிந்து கொண்டால் ஆளுனரையும், அவருக்கு அடுத்த படிநிலையிலுள்ள முதலமைச்சரையும் தனது கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கும் ஆளும் ஐக்கிய சுதந்திரக் கூட்டமைப்பு, இவர்கள் இருவரையும் மீறி சனனாயகப் போக்கில் கிழக்கின் மாகாண சபை கூடி ஏதாவதொரு முடிவை எடுத்துவிடலாம் என்பதனையும் தடுக்கும் நோக்குடன் அரசிற்கு எதிரான எந்தவொரு சிறு நகர்வும் சாத்தியப் படாமற் போகச் செய்வதற்காகவே தவிசாளரையும் தனது கட்சியின் உறுப்பினராக உருவாக்கியது ஆளும் ஐக்கிய சுதந்திரக் கூட்டமைப்பு.

இவ் விடயத்தை நாம் கடந்த மாதம் நடைபெற்ற கிழக்கு மாகாண சபையின் கூட்டத்தில நடந்தது என்ன என்பதை அவதானித்துத் தெரிந்து கொள்ளலாம்.

கடந்த மாதம் நடைபெற்ற கிழக்கு மாகாண சபையின் கூட்டத்தொடரில் எதிர்க்கட்சி உறுப்பினர்களால் பேசப்படவேண்டிய இரண்டு முக்கிய விடயங்களாக அம்பாறையில் நிகழ்ந்த தேசத்திற்கு மகுடம் கண்காட்சியில் ஏற்பட்ட செலவுகள் தொடர்பான கண்டனப் பேச்சும், அதிகரிக்கப்பட்ட மின்சாரக் கட்டணங்களுக்கான கண்டனப் பேச்சும் அவ்வாறு மின்சாரக் கட்டணத்தை அதிகரித்தமைக்கு எதிரான தீர்மான முன்மொழிவும் இருந்தன.

இவ்விரு விடயங்களும் பேசப்படுவதை கிழக்கின் ஆளுனராலோ அல்லது கிழக்கின் முதலமைச்சாரோலோ தடுக்க முடியாது. ஏனெனில் மாகாண சபை உறுப்பினர் எவற்றைப் பேசலாம் எவற்றைப் பேசக் கூடாது என்பதனை இலங்கையின் அரசியற் சட்டமே வரையறுக்கின்றது.



எனவே இவ்வாறு பேச வேண்டாம் எனத் தடுப்பதற்கான அதிகாரம் ஆளுனருக்கு இல்லாமலிருந்தது. அத்துடன் கிழக்கின் முதலமைச்சாராலும் இவ் விடயத்தைத் தடுப்பதற்கு வலுவில்லாமல் போயிருந்தது. பேசப்படவிருந்த இரண்டு விடயங்களில் முதலாவது விடயமான தேசத்திற்கு மகுடம் கண்காட்சிச் செலவினை ஆளுங்கட்சி உறுப்பினர்-களைக் கொண்டு சமப்படுத்த எண்ணியிருந்த ஐ.ம.சு.கூ மின்சாரக் கட்டண உயர்வுதொடர்பாக முன்மொழி-யப்படப்போகும் பிரேரணையை வலுவில்லாமற் செய்வதற்கு தனது இராணியை கிழக்கின் சதுரங்கப் பலகையில் முன்நகர்த்தியது ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு. அதன்படி தேசத்திற்கு மகுடம் கண்காட்சிச் செலவுகள் தொடர்பான பேச்சை எதிர்கட்சி உறுப்பினர் பேசத் தொடங்கியவுடனேயே ஆளுங்கட்சி-யினர் அதனை எதிர்த்து தமது கருத்துக்களைத் தெரிவித்து அவ்விடயத்-தை சமப்படுத்தியது. அதே வேளை முன்மொழியப்படவிருந்த மின்கட்டண அதிகரிப்பு தொடர்பான பிரேரணைக்கு முன்பாகவே சபையை ஒத்திவைக்கும் முடிவை யாருடனும் கலந்தாலோசிக்காமல் அவைத் தலைவி அறிவித்தார்.

இச் சந்தர்ப்பம் கிழக்கின் மாகாண சபை மக்களுக்காக எதுவுமே செய்ய முடியாதபடி அல்லது அரசின் நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்றபடி நகர்த்தப்படும் இருள் கரங்களுக்குள் சிக்கியிருப்பதை அனைவர்க்கும் உணர்த்தியது. ஆனால் அன்றும் கூட எதிர்க்கட்சியினர் - தமிழ்த்தேசியக் கூட்டமைப்பும்,ஐக்கிய தேசியக் கட்சியும்- சபை ஒத்திவைக்கப் பட்டதை எதிர்த்து நடத்திய சாத்வீக எதிர்ப்பார்ப்பாட்டத்தில் ஆளுங்கட்சி அங்கத்தவர்கள் எவரும் கலந்து கொள்ளவில்லை.

தற்போது மக்களுக்கு எதுவும் செய்ய முடியாது உள்ளது எனக் கூறி ஆளுங்கட்சிகளின் கூட்டமைப்பைச் சேர்ந்த பெரும்பாலானவர்கள் கிழக்கின் சபை அமர்வுகளைப் புறக்கணிக்க முடிவெடுத்துள்ளதாக வெளிளியடப்பட்ட செய்தியின் படி கிழக்கு மாகாண சபை தனது தடத்திலிருந்து தெளிவான புரள்வை வெளிப்படுத்தியிருக்கின்றது.

ஆளும் கட்சியினர் அமர்வுகளைப் புறக்கணிப்பதற்கான காரணிகளாக கிழக்கின் ஆளுனரையும், முதலமைச்சரையுமே குறித்துள்ளனர். இவர்கள் இருவரும் மக்களுக்குச் சேவை செய்யத் செய்வதற்குத் தடையாக உள்ளனரா என்ற கேள்விக்கு அப்பால் இரண்டாவது மாகாணசபை ஆரம்பிக்கப்பட்ட தினத்திலிருந்து இற்றைவரை அதன் தவறான போக்கை ஆளும் மற்றும் எதிர்க்கட்சியினர் தெளிவாக வெளிக்காட்டியுள்ள இந்தச் சந்தர்ப்பமே கிழக்கின் மாகாண சபை தடம்புரள ஆரம்பித்துள்ளது என்பதை வெளிக்காட்டும் சந்தர்ப்பமாக அமைந்துள்ளது எனக் கொள்ளலாம்.

மாகாணசபை தமிழ் மக்களின் பிரச்சனைகளுக்குத் தீர்வாகாது என்ற தமிழறிஞர்களின் வாதத்தை மீண்டும் உறுதிசெய்துள்ள இப் புரள்வு எதைக் கொண்டுவரப் போகின்றது என்பதை அண்மையில் நாம் காணக் கிடைக்கும்..

## மயிர்கொட்டிகள்

வீட்டின்
கோடிப்பக்க நிமிர்ந்த முருங்கையில்
மயிர் கொட்டிகள் வரவு
அதிகரித்திருக்கிறது.

சொதிக்கு
இலை உருவப்போன அம்மா
சொறியோடு
வந்த போதுதான்
நிலமை
எல்லை மீறியது தெரிந்தது.

கொளுத்திப் போடவும்
தறித்து விடவும்
அப்பு இல்லாத அருமை
அங்கலாக்கிறது.

## தறைகளின் காலம்

நடுகைக்கான பருவகாலம்
நாற்காலி இட மறுத்ததால்
தறைகள்!
கர்ப்பம் சுமக்கவில்லை.

தாடி வளர்த்த முகமாய்
பற்றைகளின் ஆகிரமிப்பு
படர்ந்திருக்கிறது.
பயிர்வைத்த இடமெல்லாம்
பாதினீயம் முளைத்தெழுந்து
திமிர் கொட்டி நிற்கிறது.

பற்றையும் பாதினீயமும்
சேட்டைகள் செய்யும் காணியை
வேட்டையாடவும் சிலபேர்
வேறுவழிகள் பாக்கினம்.

கொத்தியும் உழுதும்
குப்பைகள் தாட்டும்
பக்குவமாய் பாத்த காணியில்
இன்று!
என்னென்னவெல்லாம் நடக்கிது
தறைகளின் காலம் துளிர்க்காதோ?
தக்காளி வெண்டி முளைக்காதோ?

## மேய்பனர்கள்

நேற்றும் எம்நிலத்தில்..........
மந்தைகளின் மேய்சல் மூர்க்கமாய்
இருந்தது.
விளைநிலங்களும் வீரியம்
இழந்தால்
களைகளின் பரவலும்
கனத்திருந்தது.

வேலிகள் பிய்த்து
வீறாப்புடன் உட்புகுந்த
மந்தைகளால்
நல்லிளம் பயிர்கள் நாசமாயின.

கடித்தும் குதறியும் மிதித்தும்
செய்வதால்
கெட்டுப்போகிறது பயிர்கள்.
மசாளித்த பயிர்களை மந்தைகள்
மேய்கிறது.
வேலிதாண்டிய மந்தைகளால்
காணிக்காரில் கலக்கம்

இன்றும் எம்நிலத்தில்
மந்தைகளின் மேய்ச்சல் மூர்க்கமாய்
இருந்தது.

மேய்பனர்கள்
மேய்த்துக் கொண்டிருக்கிறார்கள்.
மந்தைகள்
மேய்ந்துகொண்டிருக்கிறது.

நாளையும்
எம்நிலத்தில் மந்தைகளின்
மேய்ச்சல்
மூர்க்கமாய் இருக்கும்.

கு. றஜீபன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிழக்கு மாகாண சபை..

அவர்கள் மனவிரக்தியடைந்துள்ளனர் என்றும் பிரதித் தவிசாளர் தெரிவித்தார்.

மத்திய அரசின் அமைச்சர்கள் பொருளாதார மற்றும் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாக கிழக்கு மாகாணத்திற்கு வருகைதரும்போது அவ் விடயத்தை கிழக்கு மாகாண சபையின் முதலமைச்சர் கிழக்கு மாகாண சபை அங்கத்தவர்களுக்கு தெரியப்படுத்துவதில்லை என்ற குற்றச்சாட்டும் இங்குள்ளது என்று பிரதித் தவிசாளர் தெரிவித்துள்ளார். அதற்கு வலுச் சேர்க்கும் முகமாக மாகாணக் கல்வி அமைச்சர் விமலவீர திசநாயக்க கருத்தறிவிக்கும் போது மாகாண ஆளுனரதும், முதலமைச்சரதும் எதிர்மறை நடவடிக்கைகளால் கிழக்கு மாகாணசபையின் நடவடிக்கைகள் ஒட்டுமொத்தமாக தடைப்படும் அபாயம் எழுந்துள்ளதாகத் தெரிவித்துள்ளார். மேலும் சனாதிபதி இவ்விடயத்தில் தலையிட்டு தடைகளை அகற்றும்வரை அமர்வுகளைப் புறக்கணிக்கும் முடிவைத் ஆளும்கட்சி அங்கத்தவர்கள் அனைவரும் தாமாகவே முன்வந்து எடுத்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே கடந்த மாதம் நடைபெற்ற கிழக்கு மாகாண சபையின் அமர்வுகளைக் காரணம் எதனையும் தெரிவிக்காமல் மாகாண சபையின் தவிசாளர் ஒத்திவைத்தமையால் எதிர்க்கட்சியினர் சாத்வீகப் போராட்டத்தை மேற்கொண்டிருந்தனர். அவ் ஒத்திவைக்கப்பட்ட மாகாணசபை அமர்வானது திகதியெதுவும் குறிப்பிடப் படாமல் ஒத்தி வைக்கப்பட்டமையால் அம்மாதத்திற்கான அமர்வுகள் பின்னர் இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத் தக்கது. எதிர்வரும் 18ம் திகதியன்று இம் மாதத்திற்கான மாகாணசபை அமர்வு இடம்பெறவுள்ள நிலையில் அமைச்சர்கள் உட்பட ஆளுங்கட்சியினரின் அமர்வுப் புறக்கணிப்புத் தொடருமாயின் எதிர்கட்சிகளின் நிலை என்ன என்று கிழக்கின் எதிர்க்கட்சித் தலைவர் திரு தண்டாயுதபாணி அவர்களிடம் மலைமுரசு வினவியபோது ஆளுங்-கட்சியின் அமர்வுப் புறக்கணிப்பைப் பற்றி எவ்வித உத்தியோகபூர்வச் செய்திகளும் தமக்குக் கிடைக்கவில்லை என அவர் தெரிவித்தார். மேலும் கடந்த மாதம் நடைபெற்ற சபை அமர்வுகளைக் காரணம் குறிப்பிடாமலும் திகதி குறிப்பிடாமலும் தவிசாளர் ஒத்திவைத்தமையை எதிர்த்து மேற்கொள்ளப்பட்ட சாத்வீகக் கண்டனப் போராட்டத்தில் ஆளும்கட்சியினர் எவரும் ஒத்துழைப்புக்களை நல்கவில்லை எனத் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர் மக்களுக்காக உருவாக்கப்பட்ட மாகாண சபையில் மக்களின் பிரச்சனைகளைப் பேசமுடியாது ஒத்திவைக்கப்பட்டமையைக் கட்சிபேதமின்றி அனைவரும் கண்டித்திருக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

## தகரத்தில் அடைக்கும் மீன் ஆலை..

கடற்றொழில் நீரியல் வளத்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார். பாரிய அளவில் இவ் ஆலையை அமைக்க அக்கம்பனி தயாராகியுள்ள நிலையில் அத் தொழிற்சாலை திருமலையில் நிறுவப்படும் வாய்ப்புக்களும் காணப்படுவதாக தெரிகின்றது. இம்மாத இறுதியில் இலங்கை வரவுள்ள தாய்லாந்து நிறுவனத்தின் அலுவலர்கள் மீன் ஆலை அமைக்கும் சாத்திய அறிக்கையினைத் தயாரிக்கவுள்ளனர்.

ஏற்கனவே சம்பூர் பிரதேசத்தில் வர்த்தக வலயம் ஒன்று அமையவுள்ள நிலையில் இலங்கை அரசுடன் கூட்டு-முயற்சியாக உருவாகவுள்ள இந்த தகரத்திலடைக்கும் மீன் ஆலை அங்கும் நிறுவப்படும் சாத்தியப்பாடுகளும் ஆராயப்படலாம் என்றே தெரியவருகின்றது.

## 1.2 பில்லியன் பெறுமதியான..

பெறுமதி வாய்ந்த இச்சொத்துக்கள் கையகப்படுத்தப்பட்ட பின் பொது ஏலத்தில் விடப்பட்டு தேறும் தொகை திறைசேரிக்கு அனுப்பப்படவுள்ளது. பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் சட்டப்படியே இந் நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது. அத்துடன் சர்வதேச வங்கியொன்றில் உள்ள 55 மில்லியன் ரூபா காசும் கைப்பற்றப்படவுள்ளதாக மேலும் தெரியவந்துள்ளது. மேலும் பல நிலையான வைப்புக்களின் உரிமையாளர்களை கண்டுபிடிக்க முடியாதிருப்பதனால் அவையும் விடுதலைப்புலிகளுக்கு உரித்தானவையாக இருக்கும் எனும் சந்தேகம் நிலவுவதாக புலனாய்வுத்துறை அலுவலர் ஒருவர் தெரிவித்தார். பயங்கரவாத புலனாய்வுத் துறை பிரிவானது சர்வதேச புலனாய்வு நிறுவனங்களுடன் இணைந்து விடுதலைப் புலிகளின் சொத்துக்களை கையகப்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றது. கையகப்படுத்தப்படவுள்ள சொத்துக்களில் பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்திற்கு அருகிலுள்ள காணி ஒன்று உள்ளடங்குவதாக தெரிகிறது. வெள்ளவத்தையிலுள்ள தன்னார்வ தொண்டு நிறுவனமொன்றின் பெயரில் வாங்கப்பட்ட மூன்று மாடிக் கட்டடம் ஒன்றும் ஜம்பட்டா வீதியில் உள்ள அச்சகம் ஒன்றும் யாழ் நகரிலுள்ள நீலநாதன் அச்சகமும் இவற்றுள் அடங்குகின்றன.

## வடக்குடன் என்றும் இணைய..

விரும்பினாலும் கூட அல்லது அதற்கான பிரேரணை நிறைவேற்றினாலும் கூட ஒருபோதும் இணையமுடியாத நிலையை உருவாகும்.

மாகாண சபைகள் சட்டமூலம் ஒன்று கொண்டுவரப்பட வேண்டுமானால் அதற்கு சகல மாகாண சபைகளினதும் அங்கீகாரம் பெறப்படவேண்டும்.

ஆனால் தற்போது கொண்டு-வரப்படவுள்ள சட்டமூலத்தின்படி பெரும்பான்மையான மாகாணங்கள் ஒப்புதல் அளித்தால் குறித்த சட்டமூலத்தை நிறைவேற்ற முடியும்.

காணி மற்றும் காவல்துறை அதிகாரங்களுடன் தற்போது வட மாகாணசபைத் தேர்தலை நடத்தினாலும் தேர்தல் முடிவடைந்தவுடன் மாகாண சபைகளின் பெரும்பான்மையை வைத்து அதனை பாராளுமன்றத்தில் நிறைவேற்றி அவ் அதிகாரங்களை இல்லாமல் செய்வதற்கு அரசு தீர்மானித்தே அதனை மேற்கொள்கின்றது.

இதனை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கடுமையாக எதிர்ப்பதுடன் கண்டனத்தையும் தெரிவிக்கின்றது.

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தில் குறிப்பிட்டதன் படி வடக்கு, கிழக்கு என்பது தமிழ் மக்களின் பாரம்பரிய வரலாற்று நிலம் என்ற அடிப்படையில் அது 18 வருடங்கள் இணைந்தே இருந்தது என அவர் மேலும் தெரிவித்தார்.

## நிலாவெளி நோக்கி..

திரட்டும் பங்குகளை வழங்கவுள்ளது.

இப் பங்குவழங்கல் ஊடாகக் கிடைக்கவுள்ள நிதியைக் கொண்டு நிலாவெளியிலும் உல்லாச விடுதியொன்றை நியமிக்கவுள்ளதாக அந் நிறுவனத்தின் அசங்க செனவிரத்ன தெரிவித்துள்ளார். உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு உல்லாசப் பயணிகளை கவரக்கூடிய வகையில் தமது ஹோட்டல்கள் சேவைகளை வழங்கவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். பங்கொன்றின் ஆரம்ப விலையாக 12 ரூபாவை இந் நிறுவனம் நிர்ணயித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மாணவிகள் சாதனை..

கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைந்து கல்விப் பொதுத் தராதர உயர்தரப் படிப்பிற்குத் தேர்ச்சி பெற்றுள்ளனர். செல்விகள் வி. கீர்த்திகா மற்றும் ம.குமாரி ஆகிய இருவருமே இச் சாதனையைப் படைத்துள்ளனர் என அப்பாடசாலையின் அதிபர் தெரிவித்தார். சுமார் 30 வருடங்களுக்கு முன் வளங்கொழிக்கும் கிராமமாக இருந்து பன்குளம் அக் காலத்தில் கல்வி, பொருளாதாரத்தில் சிறந்த நிலையில் இருந்ததாக தெரிய வருகின்றது. தற்போது தற்போது கல்வி நடவடிக்கைகளில் அங்கு ஆர்வம் குன்றியுள்ள நிலையில் இந்த இரண்டு மாணவிகளின் பெறுபேறுகள் அக் கிராமத்தில் ஓர் நம்பிக்கைக் கீற்றை வெளிக்கொண்டு வந்துள்ளதாக அதிபர் மேலும் மலைமுரசிற்குத் தெரிவித்தார். இம் முறையும் கற்கும் மாணவ மாணவிகளில் பெரும்பாலானோர் க.பொ.த உயர்தரப் பிரவுக்குத் தேர்ச்சி பெறுவர் என்ற நம்பிக்கையையும் அவர் வெளிப்படுத்தினார்.

## ஊசலாடும் திருமலையின்..

புரிந்துணர்வு ஒப்பந்தத்தைத் தாம் கைவிடுவதாக அறிவித்திருந்ததுடன் அவ்வுடன்படிக்கை தொடர்பான நடவடிக்கைகளைக் கிழக்கு மாகாண சபையைச் செய்யமாறு மத்திய அரசு பணித்திருப்பதாகவும் ஊடகங்களுக்குச் செவ்வியிருந்தார்.

திருகோணமலை நகரசபையுடன் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தமானது அந்தப் பிரதேசத்தின் கல்வி அபிவிருத்தியை மேம்படுத்தும் நோக்கத்தைக் கொண்டது என அமெரிக்கத் தூதரகம் விடுத்-துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இவ்விடயம் தொடர்பில் இலங்கையிலுள்ள அமெரிக்கத் தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது,

திருகோணமலை பிரதேச மாணவர்களின் கல்வி மற்றும் தொழில்நுட்ப அறிவினை மேம்படுத்தும் உயரிய நோக்கிலேயே நாம் இந்த ஒப்பந்தத்தைச் செய்து கொண்டோம். இவ்வாறான எமது நோக்கம் அனைத்து மாணவர்களிடையேயும் சமாதானத்தையும் ஐக்கியத்தையும் தோற்றுவிக்கும்.

கடந்த ஆண்டு கண்டி பொதுநூலகத்திலும் பின்னர் 2011ம் ஆண்டு யாழ்ப்பாணத்திலும் இவ்வாறான நிலையங்களை நாம் உருவாக்கினோம்.


இந்த நிலையங்களை நாம் எந்த அரசியல் நோக்கத்துடனும் உருவாக்கவில்லை என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்த உடன்பாடு குறித்து, கிழக்கு மாகாண முதல்வர் அப்துல் மஜீத் இரண்டு தரப்பினருடனும் பேச்சுக்களை நடத்தியுள்ளார்.

திருகோணமலை நகர முதல்வர் மற்றும், அமெரிக்கத் தூதுவர் மிச்சேல் ஜே சிசின் ஆகியோருடன் நடத்தப்பட்ட கலந்துரையாடல் குறித்து வெளிவிவகார அமைச்சுக்குத் தெரியப்படுத்தியுள்ளதாக கிழக்கு முதல்வர் அப்துல் மஜீத் தெரிவித்துள்ளார்.

## உலக சுற்றாடல் தினம்

தி/கலைமகள் மகா வித்தியாலயத்தில் உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு நடைபெற்ற மரநடுகை வேலைத்திட்டத்தில் கிராம முன்னனேற்ற சங்கத் செயலாளர் திரு.ப.கந்தசாமி, கிராம சேவையாளர் திரு.சு.சிவானந்தம் மற்றும் ஊர்ப் பிரமுகர்கள், பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். பாடசாலை அதிபர் திரு.க.ரவிதாஸ் தலைமையில் பொறுப்பாசிரியர் திருமதி. மா.பொன்னம்பலம் அவர்களின் ஒழுங்கு படுத்தலில் இந் நிகழ்வு நடைபெற்றது.



## பாகிஸ்தானிய கடற்படையினர்..

கடந்த மாதம் 14ம் திகதி தொடக்கம் 17ம் திகதி வரை திருகோணமலை கடற்படைத் தளத்திற்கு வருகை தந்திருந்த **F-22P** கடற்படைக் கப்பலின் மாலுமிகள் திருகோணமலையிலுள்ள ரேவதா அனாதை விடுதி ஒன்றிற்கு சென்றிருந்தனர்.

சுமார் ஐந்து மணி நேரத்தை அக் குழுந்தைகளுன் செலவிட்ட அவர்களுடன் சென்றிருந்த கடற்படை வைத்தியர் அக் குழந்தைகளை பரீட்சித்து தேவையான மருந்துகளை முன்மொழிந்ததுடன் அவர்களுடன் சென்றிருந்த முடிதிருத்துனர் அம் மாணவர்களிற்கு முடி திருத்தும் பணியையும் மேற்கொண்டிருந்தனர்.

பரிசுப் பொருட்களையும் அன்பளிப்புக்களையும் அவர்கள் அக் குழந்தைகளுக்கு வழங்கினர்.

## கிண்ணியாவில் கன்னமிட்டனர் கள்வர்கள்!!

கிண்ணியா நகரசபை வீதியில் அமைந்துள்ள வீடு ஒன்றிலிருந்து சனிக்கிழமை (01.06.2013) காலை 5.20 மணியளவில் சுமார் 80 இலட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகளும் 6000 ரூபா பணமும் கொள்ளையடிக்கப்பட்டுள்ளதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அதேவேளை பிரபல வைத்தியர் ஒருவரின் வீட்டிலிருந்து 80,000 ரூபா பெறுமதியான தொலைக்காட்சிப் பெட்டியொன்றையும் கள்வர்கள் கன்னமிட்டுள்ளனர் என தகவல்கள் தெரிவிக்கின்றன. இக் கொள்ளை அதிகாலையிலே நிகழ்ந்திருப்பதாகவும் வீட்டின் பின்பக்க வழியாக நுழைந்த கள்வர்கள் தொலைக்காட்சிப் பெட்டியைக் களவாடிச் சென்றுள்ளதாகவும் வீட்டின் உரிமையாளர் தெரிவித்தார். வைத்தியர் காலைத் தொழுகைக்காக எழுந்த போதே தொலைக்காட்சி காணாமற் போயிருப்பது தெரியவந்துள்ளது.

இவ்விரு கொள்ளைகள் தொடர்பாகவும் முறைப்பாடுகளைப் பெற்றுக்கொண்டுள்ள காவல்துறையினர் விசாரணைகளை முடுக்கி விட்டுள்ளனர். திடீரென நிகழ்ந்துள்ள இக் கொள்ளைச் சம்பவங்களால் கிண்ணியா பிரதேச மக்கள் கலக்கமடைந்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## அறிந்துகொள்ளுங்கள்

### புவி

**உயிர்களின் பரிணாம வளர்ச்சி**

இன்றைய நிலையில், புவியில் மட்டுமே உயிர்களின் பரிணாம வளர்ச்சி ஏற்பட ஏதுவான சூழல் உள்ளது. நான்கு பில்லியன் ஆண்டுகளுக்கு முன் ஆற்றல் மிகு வேதியியல் வினைகளால் சுயமாக உருவாகும் மூலக்கூறுகள் ஏற்பட்டன, பிறகு அரை பில்லியன் வருடங்களுக்குள் எல்லா உயிரினங்களின் பொது மூதாதையரான உயிரினம் உருவாகியது. தாவர உயிரினங்களின் ஒளிச்சேர்க்கைத் தன்மையினால் சூரிய ஆற்றலை உபயோகப்படுத்தின் இந்த வேதி வினையினால் ஏற்பட்ட பிராணவாயு (ஒட்சிசன்) வளிமண்டலத்தை நிரப்பியது. மேலும் ஓசோன் (ஒட்சிசன் மூலக்கூறின் ஒருவடிவம் $O_3$) படலம் மேல் வளி மண்டலத்தில் உருவாக உதவியது. பல சிறு செல்கள் பெரிய செல்களுடன் சேர்ந்ததினால் நுணுக்கமான செல்கள் யூகேர்யோட்டுகள் (eu-karyotes) உருவாகின. இப்படிப்பட்ட காலனிகளில் அடங்கிய செல்கள் தனித்தன்மையுடன் செயல்படத் தொடங்கியபோது உண்மையான பல செல் படைத்த உயிரினங்கள் உருவாகின. மேலும் வளி மண்டலத்தின் மேற்பரப்பில் அமைந்த ஓசோன் மண்டலம் வெளியிலிருந்து புவிக்கு வரும், கேடு விளைவிக்கும் புற ஊதாக் கதிர்களை உறிஞ்சியதால் பூவுலகில் உயிர்கள் தழைத்தன.



1960 ஆம் ஆண்டு முதல் ஆய்வாளர்கள், நியோபுரோட்டி-சோயிக் காலத்தில் அதாவது 750 மற்றும் 580 மிமுவில் புவியின் பெரும்பகுதி பனியால் மூடியிருந்ததென்றும் மற்றும் மிகப்பல பனிக்கட்டியாறுகள் ஓடியதென்றும் அறிவிக்கின்றனர். அந்தக் காலத்திய புவியை "பனிப்பந்து புவி" என அழைக்கின்றனர். அந்த காலகட்டம் மிகவும் இன்றியமையாததாக கருதப்படுகிறது ஏனெனில் இது பல செல் உயிரினங்கள் தோன்றி பரவிய கேம்ப்ரியன் விரிவாக்க காலத்திற்கு முன்னால் வந்தது.

கேம்ப்ரியன் காலத்து விரிவாக்கத்தைத் தொடர்ந்து, 535 மில்லியன் வருடங்களில் புவியில் ஐந்து பேரழிவுகள் ஏற்பட்டுள்ளன. கடைசியாக ஏற்பட்ட பேரழிவு 65 மில்லியன் வருடங்களுக்கு முன் ஒரு பெரிய விண்கல் புவியில் வந்து விழுந்ததால் ஏற்பட்டிருக்கக் கூடும் என நம்பப்படுகிறது. இந்த தாக்கத்தினால் டைனோசர் உட்பட பல ராட்சத பல்லிகள் மற்றும் பறவையினங்களைத் தவிர்த்து மற்ற எல்லாமுமே கூண்டோடு அழிந்து போனது. இதில் தப்பியது எலியைப் போன்ற ஷ்ரூ என்று அழைக்கப்படும் பாலுண்ணிகளே.


*(தொடரும்.)*

## நன்றி மறப்பது நன்றன்று

ஒரு காட்டில் கலைமான் ஒன்று இருந்தது. அங்கு நிறையப் புல் வெளிகள் இருந்தன. அவற்றை உண்டு அம்மான் சுகமாய் வாழ்ந்து வந்தது. எவ்விதக் குறையும் இல்லாததால் அது மிகவும் சந்தோசமாக வாழ்ந்தது. அதற்கு குறைவில்லாத உணவு கிடைத்தது. அதனால் நன்றாகக் கொழுத்து மிக அழகாகக் காணப்பட்டது. ஒரு நாள் அந்தப் பக்கம் வந்த வேடன் ஒருவன் அம்மானைக் கண்டான். நன்றாகக் கொழுத்திருந்த அம்மானை சாப்பிடுவதற்கு ஆசைப்பட்டான். ஆகையால் அக்கொழுத்த மானை கொல்லுவதற்கு எண்ணினான். அம்பேந்தி அம்மானைத் துரத்தினான். வேடனைக் கண்ட மான் மிகவும் பயந்து தன்னுடைய பலத்தையெல்லாம் ஒன்றுதிரட்டி மிக வேகமாக ஓடி ஒரு பெரிய புதருக்குப் பின்னால் மறைந்து நின்றது. மானைத் துரத்தி வந்த வேடன் திடீரென்று மான் மறைந்ததை நினைத்து ஆச்சரியமுற்றான். இங்கும் அங்கும் அலைந்து அலைந்து தேடினான். மானைக் காணாமல் அருகில் உள்ள பெரிய மரத்தின் கீழ் அமர்ந்து இளைப்பாறினான். சற்று நேரத்தின் பின்னர் மான் அப்புதருக்குள் இருந்தபடியே சுற்றித் சுற்றித் தேடியது அந்த வேடனை. வேடன் தென்படவில்லை. மறைந்து ஒளிந்திருந்த மான் வேடனைக் காணாமல் தனது அபாயம் நீங்கியது என்று எண்ணி பெருமூச்சொன்று விட்டது. ஓடி வந்த களைப்பால் அதற்கு அதிகப் பசியாய் இருந்தது. தன்னை மறந்து அப்புதரிலுள்ள இலைகளைத் தின்ன ஆரம்பித்தது. சிறிது நேரத்தில் அப்புதரில் இருந்த இலைகளைத் தின்று தீர்த்தது. அதனால் அம்மானை மறைத்த புதர் காலியாகி அது இருக்கும் இடம் வெளியில் நன்றாகத் தெரிந்தது. தற்செயலாய் அப்பக்கம் திரும்பிய வேடன் மானைக் கண்டான். உடனே சத்தம் செய்யாமல் மெதுவாக சற்று அருகில் வந்து அசைவேதும் ஏற்படுத்தாமல் உடன் ஓர் அம்பால் அதை அடித்துக் கொண்றான். இறக்கும் தருவாயில் மான் தனக்குள் "என் உயிரைக் காப்பாற்றிய புதரின் இலைகளை நன்றி கெட்டு நான் தின்றதால் எனக்கு இத்தீங்கு வந்தது" என நினைத்தது. அருகில் வந்த வேடன் தனக்கு அருமையான உணவு கிடைத்துள்ளதாக மிகவும் சந்தோசப்பட்டுக் கொண்டு அம்மானைத் தூக்கி தன் தோளில் போட்டுக் கொண்டு சென்றான்.

### அனைத்துலக ஆண்டுகள்

- 2010 - உயிர்ப்பல்வகைமை ஆண்டு
- 2010 - கடலோடிகள் ஆண்டு
- 2009 - இணக்க ஆண்டு
- 2009 - இயற்கை இழைகள் ஆண்டு
- 2009 - மனித உரிமைக் கல்வி ஆண்டு
- 2009 - வானியல் ஆண்டு
- 2009 - மனிதக் குரங்குகள் ஆண்டு
- 2008 - புவிக்கோள் ஆண்டு
- 2008 - மொழிகள் ஆண்டு
- 2008 - புறத்தூய்மை ஆண்டு
- 2008 - உருளைக்கிழங்கு ஆண்டு
- 2007 - துருவ ஆண்டு
- 2006 - பாலைவனமும் பாலைவனமாதலும் ஆண்டு
- 2005 - நுண்கடன் ஆண்டு
- 2005 - விளையாட்டுக்கும் உடற்பயிற்சிக் கல்விக்குமான ஆண்டு
- 2005 - இயற்பியல் ஆண்டு *(தொடரும்.)*




# பெண் விடுதலை பற்றி பாரதியார்!

1904 ஆம் ஆண்டில் சுதேசமித்திரன் இதழில் பாரதி மொழிபெயர்ப்பாளராகப் பணியாற்றிய போது சென்னை திருவல்லிக்கேணியில் இருந்த வைத்தியநாத அய்யர் என்பவர் "சக்ரவர்த்தினி" என்னும் பெயரில் பெண்களுக்கான மாத இதழை நடத்தினார். இந்த இதழில் பாரதியார் 1904 முதல் 1906 வரை ஆசிரியராக இருந்து வந்துள்ளார். இந்தக் காலகட்டத்தில்தான் பாரதியார் பெண் விடுதலைக்காக மிகத் தீவிரமாக எழுதியுள்ளார். அவற்றில் சிலவற்றை நாம் காணலாம்.

"பரிபூரண ஸமத்துவம் இல்லாத இடத்தில், நாம் ஆண் மக்களுடன் வாழ மாட்டோம் என்று சொல்லுவதனால் நமக்கு நம்முடைய புருஷராலும், புருஷ சமூகத்தாராலும் நேரத்தக்க கொடுமைகள் எத்தகையோயாகினும், எத்தன்மை உடையனவாயினும் நாம் அஞ்சக்-கூடாது. சகோதரிகளே! ஆறிலும் சாவு நூறிலும் சாவு. தர்மத்திற்காக இறப்போரும் இறக்கத்தான் செய்கி-றார்கள். பிறரும் இறக்கத்தான் செய்கிறார்கள். ஆதலால் சகோதரிகளே! பெண் விடுதலையின் பொருட்டாகத் தர்ம யுத்தம் தொடங்குங்கள்! நாம் வெற்றி பெறுவோம்" எனப் பாரதி பெண் விடுதலைக்காகப் பாடுபட, பெண்களை அழைக்கிறார்.

மேலும் தீவிரமாகப் பாரதி கூறுகிறார். "நான் எல்லா வகைகளிலும் உனக்குச் சமமாக வாழ்வதில் உனக்குச் சம்மதமுண்டானால் உன்னுடன் வாழ்வேன். இல்லாவிட்டால், இன்று ராத்திரி சமையல் செய்ய மாட்டேன் எனக்கு வேண்டியதைப் பண்ணித் தின்று கொண்டிருப்பேன். உனக்குச் சோறு போட மாட்டேன் நீ அடித்து வெளியே தள்ளினால் வீதியில் கிடந்து சாவேன். இந்த வீடு என்னுடையது. இதை விட்டு வெளியேறவும் மாட்டேன் என்று கண்டிப்பாக சொல்லிவிடவும் வேண்டும்."

*பெண்கள் பதிவிரதைகளாக இருக்க வேண்டுமானால் அதற்கு ஆண்கள் தான் ஒழுங்காக இருக்க வேண்டும் என்கிறார் பாரதி.*

"அடப்பரம மூடர்களே! ஆண்பிள்ளைகள் தவறினால் ஸ்தீரிகள் பதிவிரதைகளாக எப்படி இருக்க முடியும்? பதிவிரதயத்தைக் காப்பாற்றும் பொருட்டாக ஸ்தீரிகளைப் புருஷர்கள் அடிப்பதும், திட்டுவதும், கொடுமை செய்வதும் எல்லையின்றி நடைபெற்று வருகிறது. சீச்சி! மானங்கெட்ட தோல்வி, ஆண்களுக்கு அநியாயமும், கொடுமையும் செய்து பயனில்லை."

*தொடக்க காலத்தில் உடன்கட்டை ஏறும் சதியைப் பாரதி மிகவும் வன்மையாகக் கண்டிக்கிறார்.*

"எண்ணிறந்த ஸ்த்ரிஹத்தி புரிந்து, இத்தேசத்துக்கெல்லாம் அழிக்க முடியாத பெரும் பழி கொடுத்த ஸதி தஹனமென்னும் அரக்கனை மிதித்துக் கொல்லும்படியாக முதலிலே துக்கப்பட்ட ராம்மோஹனரின் திருவடியை நாம் மறந்துவிட்டால் நமக்கு உய்வுண்டாமா?'' எனப் பெண்களிடம் கேட்கிறார் பாரதியார்.

*(கீற்று)* *(தொடரும்..)*


## மாங்காய்ச் சட்னி

**தேவையான பொருட்கள்:**

மாங்காய் - 4, சீனி - கால் கி.கிராம், கடுகு - 1 தே.க, உள்ளி - 5 பல்லு, இஞ்சி - 1 துண்டு, தனிமிளகாய்த் தூள் - 1 மே.க, கறுவாத் தூள் - 2 சிட்டிகை, வினாகிரி - 2 தம்ளர், உப்புத்தூள் - அளவிற்கு, பிளம்ஸ் - 100 கிராம், சிறிதாக வெட்டிய கஜு - 50 கிராம், சோயா சோஸ் - 3 மே.க

**செய்முறை:**

மாங்காயின் தோலைச் சீவியகற்றிய பின்பு மிக மெல்லிய சீவல்களாகச் சீவி உப்புத்தூள் அளவிற்குப் புரட்டி இரண்டு நாள் வெயிலில் காய வைத்து எடுத்துக் கொள்ளவும். கடுகு, இஞ்சி, உள்ளி என்பவற்றிற்கு 2 மே.க வினாகிரி விட்டுப் பசுந்தையாக அரைத்தெடுத்துக் கொள்ளவும். பின்பு மண்சட்டியில் மிகுதி வினாகிரியை விட்டு சீனியைப் போட்டுக் காய்ச்சி சீனி முழுவதும் கரைந்தவுடன் மாங்காய், அரைத்த கூட்டு, கறுவாத் தூள் சோயா சோஸ் என்பவற்றைச் சேர்த்து நன்றாகக் கிளறிக் கலவை ஓரளவாகத் திரளத் தொடங்கியதும் இறக்கி கஜு, பிளம்ஸ் என்பவற்றைக் கலந்து நன்றாக ஆறிய பின்பு தொற்று நீக்கிய போத்தலில் அடைத்துவைத்துப் பயன்படுத்தலாம். இதே போல் கத்தரிக்காயை மெல்லிய நீளத் துண்டுகளாக வெட்டி பிறவுண் நிறமாகப் பொரித்தெடுத்துக் கொண்ட பின் மாங்காய்ச் சட்னி போல் செய்து கத்தரிக்காய்ச் சட்னி செய்யலாம்.



## ஈரப்பலாக்காய்க் கறி



**தேவையான பொருட்கள்:**

ஈரப்பலாக்காய் - 1, பம்பாய் வெங்காயம் - 1, பச்சைமிளகாய் - 4, மிளகு - 1 மே.க, உள்ளி - 3 பல்லு, மஞ்சள் தூள் - 1 தே.க, தேய்காய்ப்பூ - 4 மே.க, சீரகம் - 1 தே.க, கடுகு - 1 தே.க, கறிவேப்பிலை - 1 நெட்டு, தே.எண்ணெய் - 3 மே.க

**செய்முறை:**

ஈரப்பலாக்காயின் தோலை நீக்கி அளவான துண்டுகளாக வெட்டிக் கழுவி வைத்துக் கொள்ளவும். வெங்காயம், பச்சை மிளகாய் என்பவற்றைத் துப்பரவு செய்து அளவான துண்டுகளாக வெட்டி எடுத்துக் கொள்ளவும். பின் மிளகு, மஞ்சள், உள்ளி, தேங்காய்ப் பூ, சீரகம் என்பவற்றிற்கு அளவிற்கு நீர் சேர்த்துப் பசுந்தையாக அரைத்தெடுக்கவும். பாத்திரத்தில் வெட்டிய ஈரப்பலாக்காயை இட்டு அளவிற்குத் தண்ணீர் விட்டு மூடி அவிய விடவும். பலாக்காய் முக்கால் பதமாக அவிந்து வரும் போது அரைத்த கூட்டைப் போட்டு நன்கு சேர்த்து வேகவிட்டு இறக்கி வைக்கவும். பின்னர் தாச்சியில் எண்ணெயை விட்டுக் கொதித்த பின் கடுகையிட்டு வெடிக்க வைத்து வெட்டிய வெங்காயம், பச்சைமிளகாய் என்பவற்றையிட்டு வதங்க விட்டு கறிவேப்பிலையும் இட்டு இறக்கி அவித்து வைத்துள்ள பலாக்காய் கறியினுள் கொட்டிக் கலந்து பின் பரிமாறவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடந்த வார ஆங்கிலப் பத்திரிகைகளின் மீதானபார்வை...

## The Sunday Times

### இறக்குமதி செய்யப்படும் சீனியில் உடனடிப் பரிசோதனை

இறக்குமதி செய்யப்படும் சீனியில் நச்சுப்பொருட்களின் அளவு அதிகமாகக் கலந்துள்ளதா என்பதை உடனுக்குடன் ஆராயும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக சுகாதார அலுவலர் ஒருவர் தெரிவித்தார். கட்மியம் மற்றும் ஆஸனிக் நச்சுப்பொருட்கள் இறக்குமதி செய்யப்படும் சீனியில் கலந்துள்ள அளவே இவ் ஆய்வில் தெரியவரவுள்ளது.

### சீனாவிடமிருந்து மேலும் கடன்

இலங்கைக்கு மேலும் சுமார் 2.2 பில்லியன் அமெரிக்க டொலரை சீனா வழங்க முன்வந்துள்ளது. இவை 278 பில்லியன் ரூபாய்களாக காணப்படும் என சீன வெளிவிவகார அமைச்சின் பேசவல்ல அதிகாரி தெரிவித்தார். சனாதிபதி மஹிந்த ராசபக்ஷ அண்மையில் சீனாவுக்கு மேற்கொண்ட பயணத்தின் போது அந்நாட்டுடன் பாதுகாப்பு ஒப்பந்தமொன்றையும் இலங்கையின் உட்கட்டுமான விருத்திக்கான பல ஒப்பந்தங்களும் இரு நாடுகளுக்குமிடையில் நடந்தேறி இருந்தது. இவ் ஒப்பந்தங்களின் சாராம்சங்களை வெளிப்படுத்த விரும்பாத சீன வெளிவிவகார அமைச்சு மேலெழுந்த வாரியாக இவ் ஒப்பந்தங்களூடாக உட்கட்டுமான விருத்திக்கான நிதியையும் இலங்கை படையினருக்கான பயிற்சியினையும், தொழினுட்ப வசதியினையும் வழங்க சீனா முன்வந்துள்ளது என மட்டுமே தெரிவித்துள்ளது.

### பாவனைக்குதவாத கிழங்கிற்கு நடந்தது என்ன?

மனிதப் பாவனைக்கு உதவாதது என சுங்கத் திணைக்களத்தால் அறிவிக்கப்பட்டு அழிக்கப்பட வேண்டியது என நாமமிடப்பட்ட 25000 கிலோ உருளைக்கிழங்குகள் எவ்வாறு தம்புள்ளையில் உள்ள அரிசி ஆலையொன்றுக்கு கொண்டுவரப்பட்டது என்பது புதிராகவுள்ளது. இவ்விடயம் தொடர்பாக சுங்கப்பணிப்பாளர் நாயகம் விசாரணை ஒன்றுக்கு உத்தரவிட்டுள்ளார். சுங்கத் திணைக்களத்தின் மேற்பார்வையில் அழிக்கப்பட்டிருக்க வேண்டிய இந்த உருளைக்கிழங்கு தம்புள்ளை அரிசி ஆலையில் குறித்த காலத்தின் பின் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. உருளைக்கிழங்கினுள் ஒழித்து போதைப்பொருட்களை ஒரு தடவையும் கருக்கலைப்பு மருந்துகளை இன்னொரு தடவையும் இலங்கைக்குள் கொண்டுவர எடுக்கப்பட்ட முயற்சிகளை சுங்கத் திணைக்களம் வெற்றிகரமாக தடுத்திருந்தது. இந்நிலையில் அழிக்கப்பட்டிருக்க வேண்டிய இப்பழுதடைந்த கிழங்குகளுள் யாதாயினும் தடுக்கப்பட்ட பொருட்கள் கடத்தப்பட்டனவா எனும் சந்தேகம் எழுந்துள்ளது.

### ஹோமாகமவுக்கு புதிய நீதிபதி

இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டில் பதவி பறிக்கப்பட்டுள்ள ஹோமாகம நீதிபதியின் இடத்திற்கு புதிய நீதிபதியை நியமிக்கும் முடிவை சட்டத்துறை ஆணைக்குழு மேற்கொண்டுள்ளது. 300,000 ரூபாவை இலஞ்சமாகப் பெற்றார் எனும் குற்றச்சாட்டில் ஹோமாகமவின் முன்னைய நீதிபதி சுனில் அபயசிங்க இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவால் கைது செய்யப்பட்டிருந்தார். இவ்வாறு புதிதாக நியமிக்கப்படவுள்ள நீதிபதி கொழும்பு மாவட்ட மேலதிக நீதிபதியாகக் கடமையாற்றிய மாபா பண்டார என நீதிச் சேவை ஆணைக்குழுவின் செயலர் தெரிவித்தார்.

### நீதிச் சேவை ஆணைக்குழுவின் வெப் தளத்தில் பிரதம நீதியரசராக சிராணி

நீதிச் சேவை ஆணைக்குழுவின் அலுவலக வலைத்தளத்தில் பிரதம நீதியரசராகவும் நீதிச் சேவை ஆணைக்குழுவின் தலைவராகவும் தற்போதும் சிராணி பண்டாரநாயக்காவே இருப்பது தெரிய வருகிறது.



### தென் இந்திய மீனவசங்க முடிவை வரவேற்கும் வட மாகாண மீனவ சங்கம்

இலங்கைக் கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைபவர்களுக்கு 100,000 ரூபாவை தண்டமாக விதிக்கும் முடிவை தென் இந்திய மீனவ சங்கம் எடுத்துள்ளமையை வட மாகாண மீனவ சங்கம் வரவேற்றுள்ளது. கடந்த பல வருடங்களாக தீர்க்கப்படாமல் இழுபறி நிலையில் இருந்த இலங்கை கடற்பரப்பின் இந்திய மீனவர்களின் அத்துமீறிய நுழைவை இத்தீர்மானத்தின் ஊடாக கட்டுக்குள் கொண்டுவர முடியும் என வடக்கின் மீனவர் சங்கம் தெரிவித்துள்ளது. இப்பிரச்சனையைத் தீர்ப்பதற்காக இரு அரசாங்கங்களும் மீனவ சங்க அமைப்புக்களும் பல தடவைகள் பேச்சுக்களில் ஈடுபட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. தென் இந்திய மீனவ சங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட இம்முடிவை அமுல்படுத்த மத்திய மாகாண அரசுகள் ஆதரவளிக்க வேண்டிய தேவை இருப்பதாக வடக்கின் மீனவ சங்கம் தெரிவித்துள்ளது.

### இலங்கைக்கும் தாய்லாந்திற்குமான உறவுகளில் மேலும் நெருக்கம்

விவசாயம் காப்புறுதி மற்றும் மீன்பிடித் துறைகளில் ஒத்துழைப்பை உருவாக்கக்கூடிய பல ஒப்பந்தங்கள் இலங்கைக்கும் தாய்லாந்திற்கும் இடையே மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அமைச்சர் நிமால் சிறி பால டி சில்வா பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார். அண்மையில் இரு நாள் உத்தியோக பூர்வ பயணத்தை மேற்கொண்டிருந்த தாய்லாந்து பிரதமருடனேயே இலங்கை சனாதிபதி இவ் ஒப்பந்தங்களை மேற்கொண்டுள்ளார். இலங்கை முன்னோக்கி பயணிப்பதற்கு இவ் ஒப்பந்தங்கள் பெருந் துணையாக அமையும் என அவர் மேலும் தெரிவித்தார்.

### நோயாளிகளிடமிருந்து இரத்தத்திற்காக பணத்தைக் கொள்ளையடிக்கும் தனியார் வைத்தியசாலை

அரச இரத்த வங்கியிலிருந்து

## THE SUNDAY OBSERVER

இலவசமாக பெற்றுக்கொள்ளும் இரத்தத்தை நோயாளர்களுக்கு பணத்திற்கு வழங்கும் பல தனியார் வைத்தியசாலைகள் பற்றிய முறைப்பாடுகளை சுகாதார அமைச்சு பெற்றுள்ளது. 1 பைந்து இலவச இரத்தத்தை சுமார் 20000 ரூபாவுக்கு விற்பதாக முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளது. இம்முறைப்பாடுகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கமுடியாமைக்குக் காரணம் எந்த ஒரு தனியார் வைத்தியசாலையின் பற்றுச்சீட்டிலும் இரத்தத்திற்கான செலவு தனியாக குறிப்பிடப்படாமையே ஆகும் என சுகாதாரத் துறை பிரதி அமைச்சர் தெரிவித்துள்ளார். வறியவர்கள் பெருமளவு பணத்தை செலவழித்து தனியார் வைத்தியசாலைகளின் சேவையைப் பெற வேண்டி இருப்பதாகத் தெரிவித்த அவர் அதற்கேற்றாற் போல் தனியார் வைத்தியசாலைக்கு அருகிலேயே அடகு பிடிக்கும் நகைக் கடைகள் தமது கிளைகளை திறந்துள்ளனர் என்றும் தெரிவித்தார்.

### பலாலியில் கையகப்படுத்தும் நிலத்திற்கு சந்தைப் பெறுமதியில் நட்டஈடு

யாழ்ப்பாணத்தின் வலிகாமம் பிரதேசத்தில் உள்ள 17 முகாம்களில் 14 முகாம்களை பலாலிக்கு மாற்றும் முடிவை இராணுவம் எடுத்துள்ளது. தற்போது இந்த முகாம்கள் தனியார் நிலங்களிலும் வீடுகளிலும் இயங்குகின்றதால் அவற்றிற்கான நட்ட ஈட்டை சந்தைப்பெறுமதியின் அடிப்படையில் வழங்கவுள்ளது. இராணுவ முகாம்கள் இயங்கும் கட்டட மற்றும் நில உரிமையாளர்கள் எவ்வித முறைப்பாடுகளையும் இவ்விடயம் தொடர்பாக மேற்கொள்ளவில்லை. ஆனால் அரசியல் வாதிகளே இவ்விடயத்தை கையில் ஏந்தி கதறுகிறார்கள் என இராணுவப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். வலிகாமத்தின் 3 முகாம்கள் மிக முக்கியமான இடங்களில் அமைந்திருப்பதால் அவை இடத்திலே இருப்பதை வலிகாமத்தின் பாதுகாப்புக்குத் தேவையானது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். 14 முகாம்களையும் பலாலிக்கு மாற்றும் போது கையகப்படுத்தப்படவுள்ள தனியார் நிலங்களிற்கு சந்தைப் பெறுமதியில் நட்டஈடு வழங்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

### இடைநிறுத்தப்பட்டது புரிந்துணர்வு ஒப்பந்தம்

அமெரிக்க நிலையமொன்றை திருகோணமலையில் நிறுவுவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தை இடைநிறுத்தும் முடிவை திருகோணமலை நகரசபை மேற்கொண்டுள்ளது என நகர்சபையின் செயலர் அப்துல் நபீக் மொஹமட் நபீல் தெரிவித்துள்ளார். வெளிவிவகார அமைச்சானது இப்புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்றுக்கொள்ளத் தக்கதல்ல என அறிவித்ததைத் தொடர்ந்தே தாம் இம்முடிவை எடுத்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். மேலும் இப்புரிந்துணர்வு உடன்படிக்கையை கிழக்கு மாகாண சபை ஊடாக மேற்கொள்ளுமாறு தாம் கிழக்கு மாகாண சபைக்கு அறிவித்துள்ளதாகவும் தெரிவித்தார். இப்புரிந்துணர்வு உடன்படிக்கை தொடர்பாக விசேட புலனாய்வு நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளதாகவும் வெளிவிவகார அமைச்சின் செயலர் தெரிவித்துள்ளார். மேலும் இப்புலன் விசாரணை ஏற்கனவே கண்டியிலும் கொழும்பிலும் திறக்கப்பட்டுள்ள அமெரிக்க நிலையங்கள் தொடர்பாகவும் மேற்கொள்ளப்படும் என தெரியவருகின்றது. வெளிவிவகார அமைச்சுக்கு தெரியப்படுத்தாமல் வெளிநாட்டு தூதரகத்துடன் உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திடும் அதிகாரம் நகரசபைக்கு இல்லை என அவர் மேலும் தெரிவித்தார். "நாங்கள் அமெரிக்க தூதரகத்திடமிருந்து தகவல் எதையும் கோரவில்லை எனவும் ஆனால் திருகோணமலை நகரசபையிடம் உடன்படிக்கை சரத்துக்கள் தொடர்பான விபரங்களைக் கூறியுள்ளோம் என தெரிவித்தார்.

### ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பை சந்திக்கவுள்ள ஜாதிக ஹெல உறுமய

13வது திருத்தச் சட்டத்தை இல்லாதொழிப்பது தொடர்பாக பாராளுமன்றத்தில் கொண்டுவரப்படவுள்ள தனிநபர் பிரேரணை தொடர்பாக ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பையும் ஐக்கிய தேசியக் கட்சியையும் சந்திக்கவுள்ளதாக ஜாதிக ஹெல உறுமயவின் செயலாளர் தெரிவித்துள்ளார். இத்தனிநபர் பிரேரணை தொடர்பாக சனாதிபதிக்கு கடிதம் மூலம் தெரிவித்ததாக கூறிய ஜாதிக ஹெல உறுமய செயலாளர் இத் தனிநபர் பிரேரணை தொடர்பாக ஒவ்வொரு அரசியற் கட்சிகளையும் சந்தித்துப் பேசும் முடிவையும் ஜாதிக ஹெல உறுமய கொண்டுள்ளதாக அதன் செயலர் தெரிவித்தார். இச்சந்திப்புகளுள் தமிழ் மற்றும் முஸ்லீம் கட்சிகளும் அடங்குகின்றன என்று அவர் மேலும் தெரிவித்தார்.

### ஊழல்மிக்க சிறைக்காவலர்கள்

தடை செய்யப்பட்ட விடயங்களை சிறைச்சாலைக்குள் கொண்டு வருவதற்கு உதவி

## THE LEADER

செய்பவர்கள் ஊழல் பேர்வழிகளான சிறைப் பாதுகாவலர்களே என சிறைச்சாலை மற்றும் மறுசீரமைப்பு அமைச்சர் சந்திர ஸ்ரீ கஜதீர தெரிவித்தார். பெண் காவலர்களும் போதைப்பொருட்கள், கைத்தொலைபேசிகள் போன்ற தடை செய்யப்பட்ட பொருட்களை சிறைச்சாலைக்குள் கடத்துகின்றனர் என அவர் மேலும் தெரிவித்தார். இக்குற்றச்சாட்டு தொடர்பாக மேற்கொள்ளப்படும் விசாரணைகளில் சர்வதேச நபர்களாக காணப்படுபவர்கள் மீது சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். 26.05.2013ல் மேற்கொள்ளப்பட்ட தேடுதலின் போது வெலிக்கடை சிறைச்சாலையில் 5 கைத்தொலைபேசிகள் கண்டுபிடிக்கப்பட்டன என அவர் மேலும் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முரசின் விளையாட்டு செய்திகள்

# சைக்கிளோட்டப் போட்டியில் பங்குபற்றிய மாணவர்களுக்கு பரிசளிப்பு

திருகோணமலை, ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரியின் 116 ஆவது கல்லூரி தினத்தையொட்டி நடைபெற்ற சைக்கிளோட்டப் போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசில்கள் வழங்கும் நிகழ்வு செவ்வாய்க்கிழமை பாடசாலையின் ஆரம்பப்பிரிவு வளாகத்தில் நடைபெற்றது.

தரம் 4,5 மாணவர்களுக்கு இடையில் நடத்தப்பட்ட இப் போட்டியில் 67 மாணவர்கள் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

இவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வில், கல்லூரியின் முன்னாள் விளையாட்டுத்துறை பொறுப்பாசிரியரும் ஓய்வுபெற்ற விளையாட்டு உத்தியோகத்தருமான நடராசா சிங்காரவேலு பிரதம அதிதியாக கலந்து கொண்டு பரிசுகளை வழங்கிவைத்தார்.






# இரண்டாவதுது தடவையாகவும் புனித மரியாள் கல்லூரி அணியினர் வெற்றி

திருகோணமலை ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரிக்கும் புனித மரியாள் கல்லூரிக்கும் இடையிலான இரண்டாவது வருடாந்த வலைப்-பந்தாட்டப் போட்டி கடந்த செவ்வாய்க்-கிழமை நடைபெற்றது. இதில் புனித மரியாள் கல்லூரி அணியினர் இரண்டாவது தடவையாகவும் வெற்றி பெற்றனர்.

ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரி மைதானத்தில் இப்போட்டி நடைபெற்றது. ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரி அதிபர் திருமதி சுலோசனா ஜெயபாலன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் திருகோணமலை வலயக் கல்வி திணைக்கள பிரதிக் கல்வி பணிப்பாளர் திருமதி சுகந்தி வரதசீலன் முதன்மை விருந்தினராகவும், புனித மரியாள் கல்லூரி முன்னாள் பிரதி அதிபர் ஓய்வுபெற்ற திருமதி ஸ்ரெலா மரியநேசன், சண்முகா இந்து மகளிர் கல்லூரி முன்னாள் ஆசிரியை ஓய்வுபெற்ற திருமதி குமுதா நரேந்திரன் ஆகியோர் விசேட விருந்தினர்களாக கலந்து சிறப்பித்தனர். இப்போட்டியில் புனித மரியாள் கல்லூரி 38 புள்ளிகளையும் சண்முகா இந்து மகளிர் கல்லூரி 29 புள்ளிகளையும் பெற்றுக் கொண்டது.

வெற்றிபெற்ற புனித மரியாள் கல்லூரிக்கு பண்டிதர் ஞானபிரகாசம் வெற்றிக் கிண்ணமும், ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரி அணிக்கு அகிலேசபிள்ளை ஞாபகார்த்த கிண்ணமும் வழங்கப்பட்டது.

இப்போட்டியில் புனித மரியாள் கல்லூரியைச் சேர்ந்த செல்வி சுரேஷ்குமார் அர்ஜீனி பேற்றுஸ் எய்துநராகவும், செல்வி வதனா அன்டனி சிறந்த வீராங்கனைகளாகவும் தெரிவு செய்யப்பட்டு விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.






# உலகக் கிண்ண கால்பந்தாட்டப் போட்டிகளுக்கு ஆசியப் பிராந்தியத்தில் இருந்து ஜப்பான் தகுதி

அடுத்த ஆண்டு பிரேசிலில் நடைபெறவுள்ள உலகக் கிண்ண கால்பந்தாட்டப் போட்டிகளுக்கு ஜப்பான் தகுதி பெற்றுள்ளது.

அவுஸ்திரேலிய அணிக்கெதிரான தகுதிகாண் போட்டியை வெற்றி தோல்வியின்றி முடித்துக் கொண்டதன் மூலம் ஜப்பான் இந்த வாய்ப்பைப் பெற்றுக்கொண்டது.

தொடர்ச்சியாக ஐந்தாவது முறையாகவும் ஆசியப் பிராந்தியத்தில் இருந்து ஜப்பான் அணி உலகக் கிண்ணப் போட்டிகளுக்கு தகுதி-பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தகுதி பெறுவது மாத்திரம் போதுமானது அல்லவெனக் கூறியுள்ள ஜப்பான் கால்பந்தாட்ட அணியின் முகாமையாளர், பிரேசிலில் சிறப்பாக செயற்பட எதிர்பார்த்துள்ளதாக கூறியுள்ளார்.

# ஒரு கொலையின் கதை

6 (மாயன்)



அவர் தனது வீட்டின் மின் விளக்-கொன்றை ஏற்றியிருந்தால்........

மின்விளக்கை அப் பெண்மணி ஏற்றியிருந்தால் கொலைஞர்களால் அன்று அக் கொலையைப் புரிந்திருக்கும் வாய்ப்பு அற்றுப் போயிருக்கும். ஏனெனில் மின் ஒளி அந்தப் பிரதேசமெங்கும் பரவ யாரும் வெளியே வர எத்தனிக்கின்றார்கள் என்ற எண்ணம் கொலைஞர்களுக்கு உருவாகியிருக்கும். அதனால் வேகமாக அந்த இடத்தை விட்டு அவர்கள் அகன்றுவிடவே முயன்றிருப்பார்கள்.

ஆனால் தனியாக வசித்துவந்த அந்தப் பெண்மணியும் பயத்தினால் மின் விளக்கை ஏற்றவில்லை.

அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்ட கொலைஞர்கள் கேதீஸின் கழுத்தைக் குறிவைத்து தமது கத்தி வீச்சை மேற்கொண்டிருக்க வேண்டும். ஏனெனில் அவரது உடலின் கழுத்துப்பகுதியில் பல சிராய்ப்புக்-களும் தாடைப்பகுதியில் வெட்டுக் காயங்களும் காணப்பட்டிருந்தன. ஒரே வெட்டில் கழுத்தை வெட்டுவதென்பது சாத்தியப்படாமல் போயிருக்கின்றது. தனது இறுதி சீவ மரணப் போரை நடாத்திக்கொண்டிருந்த அந்த அப்பாவி இளைஞனை ஒரே வீச்சில் வீழ்த்த முடியாத கொலைஞர்களில் ஒருவன் கேதீஸை ஆடாமல் அசையாமல் இறுக்கிப் பிடித்துக் கொள்ள முயற்சிகளை மேற் கொண்டுள்ளான். வெளிச்சமற்ற நிலையில் அந்த முயற்சியும் அவ்வளவு இலகுவாகக் கைகூடவில்லை. இருளில் கடும் இழுபறி நிலை அங்கு உருவாகியிருந்தது. முகங்குப்புற விழுந்த கேதீஸ் தனது கைகளைக் கட்ட முனைந்த-வனைத் தடுப்பதற்காக மறுபக்கம் திரும்பி அந்த யமனுடன் போராடத் தொடங்கினான். கேதீஸின் கைகளில் இருந்த அவனது இரத்தம் கொலை-ஞர்களின் உடைகளிலும் ஊறத் தொடங்கிற்று.

. அந்த இழுபறியில் கொலைஞன் ஒருவனின் கையுறையைக் கிழித்தெடுத்துவிட்டான கேதீஸ் .

தாடை அறுபட்ட நிலை....... வலி...... பயம்...... நான் என்ன குற்றம் செய்தேன் என்ற பெருங் கேள்வி........... இம் மரணத்திலிருந்து தப்புவேனா என்ற சந்தேகம்..... இரண்டு பலமான ஆண்களின் தாக்குதல் .......... எல்லாம்...............எல்லாம் ஒன்றாகச் சேர்ந்து அந்த இளைஞனைச் சோர்வடையச் செய்ய......

அந்தக் கணத்தில் கொலைஞன் ஒருவன் கேதீஸின் கைகள் இரண்டையும் பின்புறமாக அழுத்திப் பிடிக்க இரண்டாவது கொலைஞன் சரியாகக் குறிவைத்து தனது கத்தியினை கேதீஸின் கழுத்தை நோக்கி இறக்கினான்.

வலதுபுறம் சிறிதளவு கழுத்தைப் பிளந்த அந்தக் கத்தி இடது புறம் முழுவதுமாக கழுத்தைப் பிளந்து குரல் வளையை அறுத்து அந்த இளைஞனை இந்த உலகிலிருந்து பிரித்-தெடுத்தது............... கேதீஸ் கொல்லப்பட்டான்............



கொலைஞர்கள் இருவரும் அவன் கொல்லப்பட்டான் என்பதை உடனேயே உறுதி செய்து விட்டார்கள். அதன் பின்னர் அவர்களின் திட்டப்படி ஒருவன் ஜயனார் கேணி பிரதான வாசலூடாக நடந்து வந்து தேசிய சேமிப்பு வங்கியின் முன்புற வழியாக பிரதான பேருந்துத் தரிப்பிடத்திற்கு முன்னாலுள்ள பிரதான பாதையின் ஊடாக தங்கியிருந்த விடுதி நோக்கி நகர்ந்து விட, மற்றையவன் சாயிபாபாவின் பஜனை மண்டபத்தின் பின்புற மதிலால் ஏறிக் குதித்து காளிகோயில் வீதியூடாக புதிய சோனகத் தெருவிற்கு வந்து தங்குமிட விடுதி நோக்கி நகர்ந்து விட்டான்.

விடுதியில் கொலைஞர்கள் இருவரும் இரத்தம் தோய்ந்த தமது உடைகளைக் கழற்றி பொலித்தீன் பைகளுக்குள் வைத்து தமது பயணப் பொதிக்குள் செருகிக் கொண்டனர். அத்துடன் கத்தியையும் அவ்வுடைகளுடன் ஒருவன் தனது பயணப் பொதிக்குள் வைத்துக் கொண்டான்.

அவர்கள் இருவரும் கேதீஸ் கொல்லப்பட்ட செய்தியை உறுதிப் படுத்தும் தொலைபேசி அழைப்பிற்காகக் காத்திருக்கத் தொடங்கினர். நேரம் இரவு 9 மணியைத் தாண்டிப் போய்க் கொண்டிருந்தது. கேதீஸின் மாமியும் அவரது தமக்கையும் இப்போது கேதீஸின் வீட்டிலிருந்து தமது வீட்டிற்குச் செல்ல ஆயத்தமாகி விட்டனர்.

தனது ஸ்கூட்டி பெப்ட் ஈருருளியை அந்தக் குச்சு ஒழுங்கைக்குள் இருந்து செலுத்தி வந்த கேதீஸின் மாமி (தந்தையின் தங்கை) பிரதான படலையை நோக்கி தனது ஈருருளியைத் திரும்பும் போது வெளிச்சத்தில் யாரோ விழுந்து கிடப்பதை தெளிவாகக் காண்கின்றார். உடனடியாக தனது முழு விசையையும் செலுத்தி ஈருருளியினை நிறுத்திய கணத்தில் பின்னாலிருந்த அவரின் தமக்கை இறங்கி பயத்தில் வந்த வழியாகவே ஓடத் தொடங்கிவிட்டார்

(தொடரும்)

மலைமுரசு பத்திரிகையின் உத்தியோகபூர்வ விநியோகத்தர்கள் - திருமலை நகர லியோ கழகத்தினர்
The official distributors of Malaimurasu - Leo club of Trincomalee Town
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
இப் பத்திரிகை, ஸ்ரீராம் பிரதர்ஸ் ... 08. 06. 2013 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.